பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 14 திங்கட்கிழமை (30-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:279




## தமிழர்களின் அரசியல் சமூக கௌரவத்தை மீட்டு நிலைநிறுத்தும் வரையும் புலிகள் ஓயமாட்டார்கள்!

### ஒஸ்லோவில் புலிகள் பிரமுகர் பாலகுமாரன் தெரிவிப்பு

ஒஸ்லோ,ஓக.30

"தமது இராணுவ மற்றும் அரசியல் பலத்தை அழித்தொழிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர் விடுதலைப் புலிகள். அதேநேரம் போர்க்காலத்தில் தாம் வெளிப்படுத்திய வீரம், தீரம், துணிவு என்பவற்றையும் அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழர்கள் நீதியான சமாதானத்தையே வேண்டுகின்றனர்; சரணாகதியை அல்ல. தமிழ்மக்களின் அரசியல் சமூக கௌரவத்தை மீட்டு நிலைநிறுத்தும் வரையில் விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்."

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மூத்தபிரமுகர் கா.வே.பாலகுமாரன். நோர்வேயில் உள்ள தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஒஸ்லோ நகரில் இடம்பெற்றன. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாலகுமாரன் சிறப்புரையாற்றினார்.

சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய பாலகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:-

கிடைத்தற்கரிய வகையில் காலத்தின் வரமாகக் கிடைத்திருக்கும் ஒப்பற்ற ஒரு தலைவனின் காலத்திலேயே நாம் எமது விடுதலையை அடைந்தே தீருவோம். அந்த அற்புதமான மனிதனின் அளவிடற்கரிய ஆற்றலை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு. உலக வல்லரசுகளின் அடுத்த கட்ட நகர்வுகளை புன்சிரிப்போடும் தத்துணிவோடும் தயாரான நிலையிலும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார் அவர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# நாளை லண்டனில் பாலாவை சந்திக்கிறார் சொல்ஹெய்ம்

## முறுகல் நிலையைத் தணிக்க நோர்வேத் தரப்பு புதிய முயற்சி

கொழும்பு,ஓகஸ்ட்30

**இலங்கை அரசுத் தரப்புக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுவரும் முறுகல் நிலையைத் தணிக்கும் புதிய முயற்சியை அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் ஆரம்பித்துள்ளனர்.**

**இதன் ஒரு கட்டமாக நோர்வேப் பிரதிநிதிகள் நாளை லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கின்றனர்.**

**அதன் பின்னர் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவர்கள் சந்தித்துப் பேசுவர் எனத் தெரிகின்றது.**

அண்மைக்காலத்தில கிழக்கிலும் தலைநகர் கொழும்பிலும் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களும் -

அதையொட்டி அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரதும் மூத்த தலைவர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்களும் -

அரசு - புலிகள் ஆகிய தரப்பினரிடையேயும் மோசமான முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதைத் துலாம்பரப்படுத்தியுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

சந்நிதி முருகன் தேரேறிவரும் காட்சி



## கிழக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் சதிவேலை நிறுத்தப்பட்டால் நிலைமை சீராகும்

### நோர்வேத் தரப்புக்கு அதை எடுத்துக்கூறுவாராம் பாலா

லண்டன்,ஓக.30

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கிழக்கில் மேற்கொள்ளும் சதிநாச வேலைகள் நிறுத்தப்பட்டால் அமைதி முயற்சிகளுக்கான சுமுக நிலை மீண்டும் ஏற்படும்.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம், அன்ரன் பாலசிங்கத்தை நாளை லண்டனில் சந்தித்துப் பேசவிருக்கின்றார். அதுதொடர்பாகக் கேட்டபோதே மேற்படி விடயத்தை சொல்ஹெய்மிடம் தாம் வலியுறுத்தப் போகின்றார் என்று மதியுரைஞர் பாலசிங்கம் கூறினார்.

நாளை சொல்ஹெய்ம் மற்றும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரைத் தாம் சந்திக்கவிருக்கின்றார் என்பதை உறுதிசெய்த மதியுரைஞர் பாலசிங்கம் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

எரிக் சொல்ஹெய்ம் என்ன தகவலை எனக்குத் தெரிவிக்க வருகின்றார் என்பது எனக்குத் தெரியாது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று திங்கட்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

காலை 10.30 மணியளவில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இச்சந்திப்புத் தொடர்பான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்பில் சமாதான நடவடிக்கையை முன்னெடுப்பதிலுள்ள இழுபறிநிலை, வடக்கு -

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு உறுப்பினர் கொலை தொடர்பாக அவரது மனைவியிடம் இன்று விசாரணை

கொழும்பு,ஓக.30

பொறலஸ்கமவில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்தகுமாரின் கொலை தொடர்பாக குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் இன்று மட்டக்களப்புக்குச் சென்று அவரது மனைவியிடம் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

துஷ்யந்தகுமாரின் கொலை தொடர்பாக அவரது மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரியிடம் பொலீஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவர்கள் இன்று மட்டக்களப்புக்குச் செல்கின்றனர்.

பொறலஸ்கமவில் துஷ்யந்தகுமார் கொல்லப்பட்ட வீட்டில் அவர் கடந்த 3 வருடங்களாக வசித்துவந்துள்ளார். ஆரம்பத்தில் தனது மனைவி பிள்ளைகளுடன் வசித்து வந்துள்ளார். இடையில் மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரியான இராஜேந்திரம் கீதாஞ்சலி வந்த பின்னர் கணவன் மனைவிக்கு இடையில் பிணக்குகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

தகராறுகள் முற்றியதனால் மனைவி தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

## பக்தர்களை ஏற்றிவந்த லொறி தடம் புரண்டு 20 பேர் காயம்!

### வல்லை நாற்சந்தியருகே சம்பவம்

வடமராட்சி,ஓக.30

வல்லைவெளி நாற்சந்தி அருகே நேற்று மாலை 4.45 மணியளவில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகித் தடம்புரண்டது. அந்த லொறியில் பயணஞ்செய்தவர்கள் இருபது பேர் காயமடைந்தனர்.


தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற இரதோற்சவத்தில் கலந்துகொண்டவர்கள் பயணஞ்செய்த லொறியே வீதியைவிட்டு விலகித் தடம்புரண்டது.

காயமடைந்தவர்கள் வரணிப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இரதோற்சவம் காண்பதற்காக சந்நிதி ஆலயத்துக்கு வந்த இவர்கள் மாலையில் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் இந்த விபத்து நேர்ந்தது.

வீதியில் எதிரே வந்த லொறி ஒன்றுக்கு இடம்கொடுப்பதற்காக வீதியை விட்டு விலகிய போது இந்த லொறி தடம்புரண்டு தரவைப் பகுதிக்குள் வீழ்ந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





சரித்திரப் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி முருகன் தேர் உற்சவத்தின் போது பறவைக் காவடி மற்றும் செடில் காவடி எடுத்தும் அங்கப்பிரதிஷ்டை செய்தும் பக்தர்கள் தமது நேர்த்திகளைப் நிறைவேற்றும் காட்சி.
(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ புதிய சித்திரத்தேரில் சந்நிதி கந்தன்

சரித்திரப் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேரின் முதலாவது உற்சவம் நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷங்களின் மத்தியில் மிகுந்த பக்திபூர்வமாக நடந்தேறியது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும வெளிமாவட்டங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் திரண்டனர்; கந்தனின் தேர்ப் பவனியைக் கண்டு பரவசமடைந்தனர்.

1986ஆம் ஆண்டு சந்நிதி முருகனின் தேர் தக்கிரையாக்கப்பட்ட பின்னர் இதுவரை கட்டுத் தேரில் பவனிவந்த முருகப் பெருமான் நேற்று புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்தார்.

இந்து கலாசார அமைச்சராக தி.மகேஸ்வரன் பணிபுரிந்த சமயம் இந்தப் புதிய தேரை நிர்மாணிக்க நிதியுதவி வழங்கியிருந்தார். அந்த நிதியுடன் பொதுமக்கள் வழங்கிய நிதியுதவிகளையும் சேர்த்துப் புதிதாக மூன்று தேர்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய ரதோற்சவத்தின்போது பிள்ளையார் முதலாவது தேரிலும் சந்நிதி வேலவன் அடுத்த தேரிலும் வள்ளி தெய்வானை சமேத ஷண்முகப் பெருமான் மூன்றாவது தேரிலும் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் பறவைக் காவடி மற்றும் செடில் காவடி எடுத்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் அடி அழித்தும் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேர் உற்சவம் காணப் படையெடுத்து வந்ததால் வல்லை மற்றும் ஆலயத்தைச் சூழவுள்ள வீதிகளில் பெரும் வாகன நெரிசல் காணப்பட்டது. இதன் காரணமாக வாகனங்கள் பலமணி நேரம் வல்லைப் பாலத்தில் காத்துக் கிடக்கவேண்டி ஏற்பட்டது. (ஜ-3-6-173)

## பொது மண்டப திறப்பு விழா

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் 'நியாப்' திட்டத்தின் கீழ் கட்டைப்பிராய் வேளாதோப்பு அம்மன் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட பொது மண்டபத்தின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இருபாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனும் கலந்துகொள்வர். (ஜ-180)

# கொட்டடியில் நாளை இடம்பெயர் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவின் நான்காவது இடம்பெயர் சேவை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இடம்பெயர் சேவையில் வாக்காளர் இடாப்புகளில் பெயர்கள் பதியப்படாதவர்களின் பெயர்களைப் பதிவுசெய்தல், தேசிய அடையாள அட்டை பெறல், பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த இடம்பெயர் சேவையில் ஜே.81 கோட்டை, ஜே.82 வண்ணார்பண்ணை, ஜே.83 கொட்டடி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களைக் கலந்துகொள்ளும்படி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் வேண்டியுள்ளார்.

இதேநேரம், தேசிய அடையாள அட்டைகள் தொலைந்தவர்களுக்கான முறைப்பாடுகளைப் பதியவும் புகைப்படம் எடுபபதற்கும் முத்திரைகளைப் பெறுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-86)

# மருத்துவ மாணவியின் உறவினர்கள் துணைவேந்தரை அறைக்குள் பூட்டினர்

## பல்கலைக்கழகத்தில் இப்படியும் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி ஒருவர் தனக்குப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டது என்று தெரிவித்து நடத்தி வந்த போராட்டம் நேற்று உச்சக் கட்டத்தை அடைந்தது. பிரஸ்தாப மாணவியின் உறவினர்கள் சிலர் நேற்றுத் துணைவேந்தரின் அலுவலகத்தில் கூடி அவரை சிலமணி நேரம் உள்ளே தடுத்துவைத்தனர்.

மருத்துவபீட மாணவியான புஸ்பமாலாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வுகாணுமாறு கோரியே அவரது உறவினர்கள் சிலர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸை சுமார் ஐந்துமணி நேரம் அவரது அறையில் தடுத்துவைத்தனர்.

நேற்று விடுமுறை நாளாக இருந்தபோதும், அவசரப் பணிகள் சிலவற்றைப் பூர்த்தி செய்வதற்காகத் துணைவேந்தர் பல்கலைக்கழகத்துக்கு நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் வந்தார். அச்சமயம் அங்கு வந்த மாணவியின் உறவினர்கள் சிலர் துணைவேந்தருடன் வாக்குவாதத்தில் இறங்கினர் என்று கூறப்படுகிறது.

புஸ்பமாலாவின் விவகாரம் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு அறிக்கையைச் சமர்ப்பித்தும் கூட இதுவரை உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் - இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்டவேண்டும் என்றும் - அவர்கள் கோரினர்.

துணைவேந்தரின் அறையைப் பூட்டி அவரை உள்ளே தடுத்துவைத்தனர். துணைவேந்தர் தமது அலுவலகப் பணிகளைக் கவனிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ அவர்கள் அனுமதிக்கவில்லை. அவரது தொலைபேசி இணைப்பையும் துண்டித்தனர்.

நேற்றுமாலை 4.45 மணியளவில் மாணவர் பேரவைப் பிரதிநிதிகள் தலையிட்டு இணக்க நிலையை ஏற்படுத்திய பிறகே அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுச்சென்றனர். (ஜ-3-5)

# நாடு திரும்பும் ஜனாதிபதிக்கு இங்கு காத்திருக்கிறது தலையிடி!

கொழும்பு,ஓக.30

பல்வேறு புதிய திட்டங்களுடனும் சிந்தனைகளுடனும் நாடு திரும்பும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இங்கு பெரும் அதிர்ச்சியே காத்திருக்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அவரது ஆளும் கூட்டமைப்புக்குள் வெடித்திருக்கும் குத்துவெட்டு, குழப்பம் அவரது அரசை ஆட்டம் காணச்செய்யும் நிலைக்குத் தள்ளி இருக்கின்றது. நாடு திரும்பியதும் அந்த அதிர்ச்சியை எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டில் இருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க என்று கூறப்படுகிறது.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்ற ஜனாதிபதி, அயர்லாந்தில் மகன் விமுக்தியைச் சந்தித்தபின் எதிர்வரும் இரண்டாம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

லண்டனில் புதிய பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் அரசியல் உத்திகளை வகுத்துக்கொண்டு நாடு திரும்பியதும் அவற்றை நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடன் ஜனாதிபதி வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் இருவருக்குமிடையிலான கயிறிழுப்பும், பங்காளிக்கட்சியான ஜே.வி.பியினரின் எச்சரிக்கையும் ஜனாதிபதியின் புதிய திட்டங்களைத் தவிடுபொடியாக்கிவிடுமோ என்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மூன்றாவது பங்காளி ஒருவருடன் பகிர்ந்துகொள்ளாவிட்டால் திறைசேரி திவாலாகிவிடும். அடுத்த பட்ஜெட்டையும் தயாரிக்க முடியாது - என்று கூறுகின்றார் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

"தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதை ஒருபோதும் மாற்ற இடம்கொடுக்கமாட்டேன். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மூன்றாவது பங்காளிகள் ஊடுருவுவதையோ அல்லது தனியார் மயப்படுத்துவதையோ அனுமதிக்கமாட்டேன்" - எனப் போர்க்கொடி தூக்கியுள்ளார் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

இதுபோன்று ஆளும் கட்சி அமைச்சர்களுக்கிடையிலான மோதல் கட்சிக்குள் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, பங்காளிக் கட்சியினரான



ஜே.வி.பியினர், அரசின் கொள்கைப் போக்கை ஆட்சேபித்து பொது வேலைநிறுத்தம் ஒன்றுக்குத் தயாராகிவருகின்றனர். இதனை ஜே.வி.பி. சிரேஷ்ட அமைச்சர்கள் பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

டாக்டர்களின் சட்டப்படி வேலை இயக்கம், சுகாதார சேவை ஊழியர்களின் வேலை நிறுத்த முஸ்தீபும் ஒருபுறம் அதனைத் தொல்லைப்படுத்தி வருகின்றன.

பட்ஜெட்டுக்கு முன் இடைக்காலக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டு அரச ஊழியர்கள் பொது வேலை நிறுத்தத்துக்குத் தயாராகின்றனர்.

இவற்றுக்கிடையில் காலியான கஜானாவை வைத்துக்கொண்டு "பட்ஜெட்" தயாரிக்க முடியாது அல்லாடுகின்றார் நிதியமைச்சர் அமுனுகம.

இந்தப் பொறுப்புகளை எல்லாம் யாரிடமாவது ஒப்படைத்துவிட்டு, சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்கவும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை வளைத்துப்போடவும் பல உத்திகள், திட்டங்களைத் தயாரித்துள்ளார் ஜனாதிபதி.

வெளிநாட்டிற்குத் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, எந்தவிதமான பிச்சல் பிடுங்கலின்றி அமைதியான முறையில் வியூகங்களை வகுத்துள்ளார்.

முதலாவதாக - நாடு திரும்பியதும், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகப் பேசி சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை ஆராய்வது.

இரண்டாவதாக - இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் பேசி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவது.

இவையே ஜனாதிபதியின் முக்கிய திட்டங்களாகும்.

ஆனால், கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் மோதல்கள், இழுபறிகள் ஜனாதிபதியின் திட்டங்களைத் தவிடுபொடியாக்கிவிடுமோ என்று கட்சியின் மூத்த தலைவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் -

பிரதமர் மஹி[illegible] ராஜபக்ஷவும் தம்பாட்டில் சீற்றம்கொண்டு கருத்து வெளியிட்டு வருகின்றார்.

கடந்தவாரம் - ஜனாதிபதி வெளிநாடு சென்றிருப்பதால் - அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. ஆனால், அவரது தலைமையில் கூடும் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்ற விரும்பாமல் முன்னால் பிரதமரும் பதில் பாதுகாப்பு அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கா, அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா போன்றோர் அக்கூட்டத்துக்கு வரவில்லை.

தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பல சதி நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதாக இந்தக் கூட்டத்தில் பிரதமர் அறிவித்திருக்கின்றார்.

தமது வாகனத் தொடரணி செல்லும் பாதையில் சில ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் பின்னரும் தனது பாதுகாப்பு ஆளணி திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் பிரதமர் சுட்டிக்காட்டியபோது, அமைச்சர்கள் பலரின் சீற்றம் பதில் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராகத் திரும்பியது என்று கூறப்படுகின்றது.

பிரதமருக்கு ஆதரவாக அமைச்சரவைக்குள் ஓரணி திரண்டு வருவதும், ஜனாதிபதிக்குத் தலையிடி கொடுக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது. (க)

## பிரிவுபசார விழா

சாவகச்சேரி,ஓக.30

சாவகச்சேரி நகர சபையிலிருந்து வவுனியா நகர சபை செயலாளராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் நகர சபைச் செயலாளர் மு.செ.சரவணபவவின் பிரிவுபசாரவிழா சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சாவகச்சேரி நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி குலமணி ஆறுமுகம் தலைமையில் இடம்பெறும். நிகழ்வில் பலர் பாராட்டுரை நிகழ்த்தவுள்ளனர். (ஜ-31)

## வீதி விபத்து தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்குசெய்துள்ள வீதி விபத்துத் தொடர்பான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'சாவு எமது பாதையில்; வீதி விபத்துக்களும் நாங்களும்' என்ற தலைப்பில் இடம்பெறும் இக்கருத்தரங்கிற்கு பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் எஸ். சிவசுவாமி கலந்துகொள்கிறார்.

யாழ். ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு வீதி விபத்துக்கள் தொடர்பாக விளக்கவுரையாற்றுவார். இக்கருத்தரங்கில் கல்வி சார் வீடியோக் காட்சி இடம்பெறும். வீதி விபத்து தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்படும். (ஜ-9)

உதயன்

## கூட்டினால் வந்த வினை !

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் ஆக்கபூர்வமான முன் நகர்வைக் காட்டாததால், இலங்கைக்கு வழங்குவதற்கு சர்வதேச சமூகம் உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபா நிதி, கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் அடிபட்டுப்போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பது நமக்குத் தெரிந்த விடயம் தான்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானம் ஆண்டி" - என்பது போல தன்பாட்டில் நகர்ந்த அமைதி நடவடிக்கைகளைத் தனது சுயநல அரசியல் நோக்கங்களுக்காகவும் ஆட்சி அதிகார அவாவுக்காகவும் போட்டுடைத்து, நிலைமையைக் குழப்பிவைத்திருக்கின்றார் இந்த நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சர்வதேச சமூகத்தின் புதிய உதவித்திட்டங்கள் தான் இப்படித்தவறிப் போகின்றன என்று பார்த்தால், இப்போது வழமையான நிதி உதவிகளும் இந்த அரசின் பொறுப்பற்ற போக்கால் வழங்கப்படாமல் கிடப்பில் போடப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று அபாயச் சங்கு ஒலிக்கப்பட்டிருக்கின்றது.

அரசு திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கைகளை அறிவிக்காததாலும், சமாதான முயற்சிகள் தேங்கிப் போனதாலும் சர்வதேச நாணய நிதியம் சுமார் 2 ஆயிரத்து 820 கோடி ரூபா நிதி உதவியை வழங்காமல் இடைநிறுத்தி வைத்திருக்கின்றது என்ற செய்திகள் இப்போது வெளியாகிவருகின்றன.

வறுமை ஒழிப்பு மற்றும் உற்பத்தி ஊக்குவிப்புக்கான சர்வதேச நாணய நிதியத்திட்டத்தின் - தலா 810 கோடி ரூபா பெறுமதியான - இரண்டாம், மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகளான - ஆயிரத்து 620 கோடிரூபா நிதி தடைப்பட்டுப் போயுள்ளது.

அது போன்று, வறுமை ஒழிப்பு உதவிக் கடன் தொகையாக உலக வங்கியினால் வழங்க இணக்கம் காணப்பட்ட ஆயிரத்து இருநூறு கோடிரூபா உதவியும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழமையாக வழங்கப்படவேண்டிய இந்த உதவித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டதற்கு அரசு தனது பொருளாதாரக் கொள்கையைத் தெளிவுபடுத்தாததும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

அரசு தனது பொருளாதாரக் கொள்கையைத் தெளிவுபடுத்திவிட்டது என்கிறார் நிதி அமைச்சர் சரத் அமுனுகம. ஆனால், "இரண்டு மாதங்களுக்கு முன்னர் அரசின் பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பு என்ற பெயரில் வெளியிடப்பட்டது அரசின் பொருளாதார நோக்கே தவிர வேறில்லை. அது பொருளாதாரக் கொள்கைப் பிரகடனம் இல்லை" - என்கிறார் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட வதிவிடப் பிரதிநிதி ஜெர்மி கார்ட்டர்.

இவ்வாறு பொருளாதார விவகாரத்திலும், அரசியல ரீதியில் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதிலும் தெளிவான கொள்கைக் கோட்பாடு இல்லாத இந்த அரசின் செயலற்ற தன்மை காரணமாக நாடு பெரும் பொருளாதார, வள இழப்புகளை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டில் சிக்கியிருக்கின்றது.

இந்த இரண்டு விடயங்களிலும் முரணான - விநோதமான - சிக்கலான - குழப்பமான - கொள்கைப் போககையுடைய இடதுசாரிப் பேரினவாதிகளான ஜே.வி.பியினரை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டிணைத்துக்கொண்டு ஆட்சியை அமைத்திருப்பதே இவ்விடயங்களில் தெளிவான கொள்கைப் போக்கை - நிலைப்பாட்டை - எடுக்கமுடியாமல் அரசு தடுமாறுவதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த விநோதக் கூட்டினால் வந்த வினை இது.

அமைதி முயற்சிகள் முடக்கம், பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தில், திறைசேரி காலி, விலைவாசி உச்சத்தில், பல முனைகளில் இருந்தும் வேலை நிறுத்த எச்சரிக்கைகள் ஆக்ரோஷத்தோடு வெடிக்கின்றன. அரசுக்கூட்டமைப்பு அளித்த வாக்குறுதிகளோ காற்றில்.

தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் தாம் நீடிப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி குமாரதுங்க தீட்டிய அரசமைப்புமாற்ற யோசனை நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் கனவாகிப் போகும் நிலைமைவேறு.

மொத்தத்தில் ஜே.வி.பியுடன் கூட்டமைத்துக் கொணடு ஆட்சியைப் பிடிக்க ஜனாதிபதி குமாரதுஙக தீட்டியதிட்டம், 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான' கதையாகிவிட்டது.

இந்தத் தோல்விகளின் விளைவால் நாட்டுக்குக்கும், அரசுக்கும் பொருளாதாரப் பின்னடைவு; அரசியல் அரங்கில் செல்வாக்குச் சரிவு.

இந்தச் சரிவுகளைச் சரிக்கட்ட அரசுத் தரப்பு வேறு தந்திரங்களைக் கையாள முயல்கின்றது என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.


யுத்தப் பேரிகைகளை முழங்கத் தயாராவது போன்று பதில் பாதுகாப்பு அமைச்சரும், அவருக்குக்கீழ் பணிபுரியும் இராணுவத் தளபதியும், அமைச்சரவைப் பேச்சாளரும் கருத்து முழக்கங்களைச் செய்துவருகின்றார்கள்.

பொருளாதார, அரசியல் தளங்களில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளையும், பின்னடைவுகளையும் யுத்த தீவிரத்தில் - அல்லது யுத்தத்தின் மூலம் - மூடி மறைக்க அவர்கள் தயாராகின்றனரோ என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டுள்ளது.

அந்த சந்தேகத்திலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

# தமிழினம் விடுதலை பெறவேண்டுமானால் போராட்டத்திறன் பேணப்பட வேண்டும்

## மாவட்ட அசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு



வலி.தென்மேற்கு,ஓக.30

தமிழினம் உரிமைபெற போராட்டத்திறன் தொடர்ந்து பேணப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

மாதகல் பகுதியில் கடந்த 1992ஆம் ஆண்டில் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடிச் சமரில் வீரமரணமடைந்த சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும் யாழ் மாவட்ட முன்னாள் தளபதியுமான லெப்டினன் கேணல் இராஜனின் 12ஆவது நினைவு நிகழ்வுகள் கடந்த வெளளிக்கிழமை மாதகலில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அரசியற்றுறைப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவிதததாவது:-

தமது சொந்த மண்ணில் ஆக்கிரமிப்புச செய்யவந்த ஸ்ரீலங்கா இராணுவத்தை எதிர்த்துப் போராடி வீரமரணமடைந்த அமரர் லெப்.கேணல் இராஜன் விடுதலைப் போராளிகளுக்கு முன் உதாரணமாகச் செயற்பட்டவர். அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் அதிபராக இருந்த காலப்பகுதியில் அவர் உருவாக்கிய - அவரால் பயிற்றுவிக்கப்பட்ட - பலர் இன்று சிறப்பாகச் செயற பட்டு வருகின்றனர்.

அவரினதும் இங்கு மாவீரர்களாகிவிட்ட ஏனைய போராளிகளினதும் தியாகம் போற்றுதற்குரியது.

எமது ஒற்றுமையும் போராட்டத்திறனுமதான் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தன. எமது இலட்சியம் நிறைவேறவும் தமிழினம் உரிமைபெற்ற இனமாக வாழவும் ஒற்றுமையும் போராட்டத்திறனும் தொடர்ந்து பேணப்படவேண்டியது அவசியம் - என்றார்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா செ. கஜேந்திரன் தமதுரையில்:-

அரசு, புலிகள் விடுத்திருந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கோரிக்கையை வழங்காது இழுத்தடித்து காலத்தைக் கடத்திவருகின்றது.

இதேவேளை - சர்வதேச சமூகம் எமக்கு வழங்கிவரும் தார்மீக ஆதரவைக குலைப்பதற்கும் தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கும் அரசு திட்டமிட்டு சதித்திட்டம் தீட்டிவருகின்றது.

உலக மக்களை ஏமாற்ற எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வுகளை அரசு முன்வைத்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதன் மூலம எமது தாயக மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து சீர்குலைப்பதற்கும் அரசு சதித்திட்டம் தீட்டி வருகின்றது.

இவற்றையிட்டு எமது மக்கள் மிகவும் விழிப்பாக - அவதானமாக - இருக்க வேண்டும் - என்றார்.

யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, சர்வதேச தமிழழ மாணவர் பேரவையைச் சேர்ந்த மயூரதன், பண்டத்தரிப்புப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மாதகல் சென்.ஜோசவ் மகாவித்தியாலயத்திலிருந்து லெப்.கேணல் இராஜனின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் 'பாண்ட்' வாத்தியம் சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டது.

இராஜனின் தாயார் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பெரும் எண்ணிக்கையான மக்களும் போராளிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-13-135)

# வலிகாமத்தில் நாளை கூட்டுறவுத் தினவிழா

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருததிக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கூட்டுறவுத் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிமுதல் மானிப்பாய் கொத்தணியின் கலையரங்க மண்டபத்தில் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் விஜிதரனும், கௌரவ விருந்தினராக பனை, தென்னை வள கூ.அ.உ. ஆணையாளர் சி.ஜயாத்துரையும் கலந்து கொள்வர்.

இதில் மங்கள விளக்கேற்றல், கொடியேற்றல், தலைமையுரை, வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் நிகழ்ச்சிகள் கூட்டுறவுத் தினவிழா சிறப்பிதழ் வெளியீடு, அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல், நாடகங்கள் என்பனவும் இடம்பெறும். (எ-100)

# இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கையளிக்கக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

## வவுனியா வெகுஜன ஒன்றியம் அனுப்பிவைத்தது

வவுனியா,ஓக.30

இன நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் புலிகள் தரப்பிலுள்ள இடைக்கால நிர்வாக யோசனையை அங்கீகரித்து அவாகளிடம் நிர்வாகத்தைக் கையளிக்குக.

இதன் மூலமே சமாதானத்தின் இறுதித் தீர்வுக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் வழிவகுக்கமுடியும்.

- இவ்வாறு வலியுறுத்தி வவுனியா வெகுஜன ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையானது மீண்டும் யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயப்பாட்டை தோற்றுவித்திருக்கிறது. எனவே, மீண்டும் பேச்சுகளை ஆரம்பித்து விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையைக் கவனத்தில் எடுத்துச்செயற்படுங்கள்.

இரண்டரை வருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பேச்சுக்கள் நடத்தப் பட்டுவந்தன.

ஆனால், தவிர்க்கமுடியாத காரணங்களால் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலைமை உயிரிழப்பு, சொத்திழப்பு ஆகியவற்றைச் சந்தித்துள்ள மககளிடததிலும் வெளிநாடுகளில் இருந்து மீளககுடியமர்ந்து வரும் மக்களிடத்திலும் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமா என்ற எணணத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினையை சுமுகமான முறையில் பேச்சுக்கள் ஊடாகத் தீர்த்துவைப்பதன் மூலம் சுபீட்சமான வாழ்வை வேண்டும் மக்களுக்கு மன ஆறுதலை அளிக்கமுடியும்.

நாட்டின் சகல அதிகாரங்களையும் கொண்ட தலைவி என்ற வகையில் தேசத்தின் எதிர்கால சுபீட்சத்தின் நல்வாழ்வினைக் கருத்திற்கொண்டு இடைநிறுத்தப்பட்டிருக்கும் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-13-204-164)

# சிறையில் இருந்து விடுதலையானோருக்கும் தெற்குப் படுகொலைகளில் தொடர்பாம்!

## பொலீஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.30

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களில் சிறையில் இருந்து விடுதலையானவர்களும் தொடர்புபட்டிருப்பது இனங்காணப்பட்டுளளதாக பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவிடயமாக பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலும் விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள உட்பூசல்களும் படுகொலைகள் இடம்பெறக் காரணமாக உள்ளன. எனினும், இந்தப் படுகொலைகளில் சிறையில் இருந்து விடுதலையானோரும் தொடர்புபட்டிருப்பது விசாரணைகளில் இருந்து அறியப்பட்டுள்ளது. இந்த வருட ஆரம்பம் முதல் கடந்த 7 மாதங்களுக்குள் நாடு முழுவதிலும் 738 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 47 சம்பவங்கள் கொழும்பு பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 39 கொலைச் சம்பவங்களும் காலியில் 44 கொலைச் சம்பவங்களும், நுகேகொட மற்றும் தங்காலைப் பொலீஸ் நிலையப் பிரிவுகளில் தலா 38 கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (6)

# நவாலிப் பகுதிக் கிணற்றுநீர் உவர் நீராக மாறிவருகிறது

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் உள்ள கிணறுகளின் நீர் உவர் நீராக மாறிவருவதால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும்சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

இதனால், இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்காக சில மைல் தூரத்திலுள்ள ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்துக்குச் சென்று அங்கு குடங்கள், பிளாஸ்ரிக் பரல்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள் என்பவற்றுடன் நீண்ட நேரம் காத்திருப்பதைக் காணமுடிகின்றது. மேலும், இப் பகுதிகளில் உள்ள நல்ல தண்ணீர்க் கிணறுகளில் இருந்து குழாய் மூலம் நீரை விநியோகிக்கப் பொதுநிறு வனங்கள் முன் வரவேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (எ-100)

### நாளை


ஆவணி 15
செவ்வாய்க்கிழமை
(31.08.2004)
திதி : பிரதமை
முற்பகல் 7.37 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு 9.17 வரை.
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம்: 3.05 - 4.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிந்தனைகள் தாம் நம்முடையவை அவற்றின் விளைவுகள் நம் பொறுப்பில் இல்லை.

# நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் சைக்கிள்களை 'ஹீரோ' நிறுவனம் உற்பத்தி செய்கின்றது

## அந்த நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர் உதயனுக்குத் தகவல்'



யாழ்ப்பாணம்,ஓக.30

'ஹீரோ' சைக்கிள் நிறுவனம் நாள் ஒன்றுகளு 20ஆயிரம் சைக்கிள்களை உற்பத்தி செய்கின்றது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஹீரோ சைக்கிள் நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினரான விஜயமுன்சால் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்று வரும் வர்த்தகக் கண்காட்சியை ஒட்டி நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், 'ஹீரோ' நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'ஹீரோ' சைக்கிள் நிறுவனம் 1971ஆம் ஆண்டு இலங்கையில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் உற்பத்தியின் அளவு குறைவானதாக இருந்தது. பின்னர் அது படிப்படியாக வளர்ந்து சென்றது. இப்போது எமது நிறுவனம் நாள் ஒன்றுக்கு 20ஆயிரம் சைக்கிள்களை உறபத்தி செய்கின்றது. 82நாடுகளுக்கு் இந்தச் சைக்கிள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நைஜீரியா, லண்டன் போன்ற நாடுகளிலேயே அதிகமான சைக்கிள்கள் விற்பனையாகின்றன. இலங்கையில் பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஹீரோவுக்கு அதிக அளவில் கேள்வி இருக்கிறது.

இலங்கையில் ஹீரோ சைக்கிள் விற்பனையில யாழ்ப்பாணம் நான்காவது இடத்தில் உளளது. தற்போது இங்கு விற்பனை அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

ஹீரோ குறூப் தொழிற்சாலையில் 12ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். நூறுக்கு மேற்பட்ட வகைகளில் (models) சைக்கிள்களை உற்பத்தி செய்கின்றோம். மூலப்பொருள்களைக்கூட வேறெங்கும் இருந்து வாங்குவது கிடையாது. எல்லாமே சொந்தமாக எமது நிறுவனத்தால் தயாரிக்கப்படுபவை.

இந்தியாவில் பாடசாலை மாணவர்களுக்கும வறிய மக்களுக்கும் எமது நிறுவனம் பல சேவைகளை வழங்கிவருகிறது. பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளை நடத்தி வறிய மக்களுக்கு அந்தச் சேவைகளை இலவசமாக வழங்கிவருகின்றோம்.

அதேபோல, யாழ்ப்பாணத்திலுள்ள வறிய மக்களுக்கு ஹீரோ சைக்கிள் நிறுவனம் விசேட உதவித்திட்டங்களை முன்னெடுக்கவிருக்கின்றது. யாழ்.மத்திய கல்லூரியுடன் இணைநது வருடாந்தம் 'ஹீரோ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி ஒன்றையும் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம் - என்று தெரிவித்தார்.

ஈஸ்வரன் ரேடர்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வந்திருந்த விஜயமுன்சால், திருமதி சங்கீதா சர்மா இலங்கையில் ஹீரோ சைக்கிள்களின் ஏகவிநியோகஸ்தரான பைசால் ஹார்ட்வெயர்ஸ் உரிமையாளர் எம்.எஸ்.எம். பைசால் ஆகியோர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வேம்படி வீதியிலிருந்து கண்காட்சித்திடல் வரை ஊர்வலமாக மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

இந்த் நிகழ்வில் யாழ்.வணிகர் கழகப் பிரமுகர்கள், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-5-7)



நேற்று யாழ். வருகைதந்த ஹீரோ சைக்கிள் நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர்களான விஜயமுன்சால், திருமதி சங்கீதா சர்மா ஆகியோர் யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்திருந்த ஹீரோ காட்சியறையில் 'உதயன்' பத்திரிகைப் பிரதியைப் பார்வையிடுகின்றனர். (படங்கள்: வசந்தன்)

### குடியியல் நடைமுறைக்கோவையின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

1) சண்முகம் ஞானசிவமும்
2) பெண் பூபதியும்
இருவரும் உடுவில்
தற்பொழுது
WELLBAUM We G 14,44894
BOCHUM, GERMANY.
இவர்கள் தமது அற்றோணித் தத்துவகாரர்
கந்தையா இராசதுரை மூலம்
சுதுமலை வடக்கு, சுதுமலை.
- *வழக்காளிகள்.*

வழ. இல. காணி/236/04

எதிராக

1) ஆறுமுகம் மகேந்திரலிங்கம்
இணுவில் கிழக்கு, இணுவில்.
சுன்னாகம் தபால்.
2) கந்தையா பாலசுப்பிரமணியம்
சுதுமலை வடக்கு, சுதுமலை.
மானிப்பாய் தபால்.
3) சற்குணசிங்கம் லிங்கேஸ்
உடுவில் தெற்கு, உடுவில்.
மானிப்பாய் தபால்.
- *எதிராளிகள்.*

மேற்குறித்த வழக்காளிகள் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம திகதி மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து, இதன்பின் ஆதன அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்திற்கும் அதற்குள் அடங்கிய கலியாண மண்டபத்துக்கும் அதற்குச் சேர்ந்தவைகளுக்கும் 2ஆம் வழக்காளியே சொந்தக்காரியென்ற பிரகடனத்தைப் பெறவும், குறித்த ஆதனத்திலிருந்து எதிராளிகளையும் அவர்களுடன் சித்திவிநாயகர் தேவஸ்தான நிர்வாகத்திலுள்ள ஏனையோரையும் பணியாளர்கள் யாவரையும் வெளியேற்றி வழக்காளிகளைக் குறித்த ஆதனத்தினதும் ஆதனத்தில் அமைந்துள்ள கலியாண மண்டபத்தினதும் அமைதியான ஆட்சியில் அமர்த்தும்படியும், எதிராளிகள் வழக்காளிகளுக்கு விசேட நட்டமாக ரூபா 20,000/-யும் வழக்காளிகள் குறித்த ஆதனத்தினதும் அதற்குள் இருக்கும் கலியாண மண்டபத்தினதும் ஆட்சியில் அமர்த்தப்படும்வரை தொடர் நட்டமாக மாதாந்தம் ரூபா 5,000மும் செலுத்த வேண்டுமென்ற கட்டளை இடும்படியும், குடியியல் நடைமுறைக் கோவையின் 16ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் அனுப்பும் படியும், நீதிமன்றச் செலவும், கோரியிருப்பதால் மன்று குடியியல் நடைமுறைக் கோவையின் 16 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் அனுப்பும்படி கட்டளையிட்டுள்ளபடியால்,

இவ்வழக்கில் அக்கறை உள்ள எவரேனும் இருப்பின் 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி இந்நீதிமன்றத்தில் தோன்றி தமது (09.09.2004) கோரிக்கையைத் தெரிவிக்குமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவில் இறை.

'போயிட்டி' நிலப்பரப்பு 1,1/2 உம் வான் செய்பயிர்களும் கலியாண மண்டபமும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும். இந்த நிலப்பரப்பு ஒன்றரைக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தர் சீனிவாசகத்தின் உரித்தாளருக்குரிய ஆதனமும் கிணறும், மேற்குக் கையொழுங்கை தெற்குக் கையொழுங்கை இவ் வெல்லைப்படி "இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

**2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி.**

நீதிமன்றக் கட்டளைப்படி
ம. செல்வரத்தினம்,
பதிவாளர்.
மாவட்ட நீதிவான் நீதிமன்றம்.
பிரதி பிஸ்கால்/ சமாதான நீதிவான்.
மல்லாகம்.

வரைந்தது
சாந்தா அபிமன்னசிங்கம்.
வழக்காளிகளின் சட்டத்தரணி

(35902)(40-14-16-26)

### துர்நாற்றம் வீசும் மீன்சந்தை

வட்டுக்கோட்டை,ஓக.30

வட்டுக்கோட்டை பொதுச்சந்தையின் மீன் சந்தை துர்நாற்றம் வீசுவதால் அயலில் உள்ளோர் சிரமங்களை எதிர்நோக்குவதாக முறைபாடு தெரிவிக்கப்படுகிறது.

மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் மீன்கழிவுகளைப் புதைக்காது வீசுவதாலும் பழுதடைந்த மீன்களை வீசுவதாலும் இந்தச் சந்தையில் தினமும் பிற்பகல் வேளைகளில் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன், இங்கு வீசப்படும் கழிவுகள் காகங்களால் எடுத்துச்செல்லப்பட்டு அயலில் உள்ள குடிமனைகளின் கிணறுகளுக்குள் போடப்படுவதால் அயலில் வசிப்போர் அதிருப்தி அடைந்துள்ளனர். (எ-161)


### வேலையாள் தேவை

பான்சிக் கடைக்கு
ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
(அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது)
தொடர்பு:
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(35897)


### துயர்பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் மாணவன்
சர்வானந்தம் ஜெயானந்தரஜீவ்
(ராயு)



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Catwas. Com,
Computer Academy,
Chundikuly, Jaffna. (சி-37332)
நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி வ.சோதிரட்ணம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி இராஜேஸ்வரி சோதிரட்ணம்**

அவர்கள் 26-08-2004 அன்று காலமான செய்திகேட்டு துயருறும் நாம் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
மானிப்பாய்.
- ஆசிரியர் கழகம்.
(35907) (26-14-16)


COMPUTER
REPAIRS
நெல்லியடியில்



MICRO PC SYSTEMS
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையத்திற்கு அருகில்)
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893



### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3737613 இலிருந்து
3754439 வரை

சீட்டிழுப்பு இல. 1534
திகதி 28.08.2004

வெற்றி எண்கள்
11 13 19 28 33

போனஸ் எண்
32

ஜக்பொட் பரிசு ரூபா.49,16,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | ஐத பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 49,16,750/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 1,00,000/- | - |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,356 | 500/- | 26,78,000/- |
| 2 | 88,735 | 20/- | 17,74,700/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 11ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 108,228 | 10/- | 10,82,280/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 70,74,980/-

Rs. 57,54,800/-

தொடர் இல. 2804168 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 01 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3743863-8-11
3745066-1-70
3748498-6-82
3747921-0-77
3737756-3-68

வளமான வாழ்விற்கு
விமுத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# வெளியிலிருந்துவரும் அடியார்களுக்கு தங்குமிடமில்லாமை நீக்கப்பட்டுவிட்டது

## தெல்லிப்பழை ஆலய யாத்திரிகர் மடம் திறப்பு விழாவில் உரை

வலி.வடக்கு,ஓக.30

யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து சமய மடங்கள் பலவும் கடந்த காலங்களில் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் வெளிநாடுகளில் இருந்தும் தென்பகுதிகளில் இருந்தும் வருகின்ற அடியார்கள் தங்கமுடியாத சூழ்நிலை காணப்பட்டது. இக்குறைபாடு யாத்திரிகள் மடம் திறக்கப்பட்டதன் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுகன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தினரால் ஆலய தென்பகுதியில் 60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட யாத்திரிகர் மடம் ஆலயத் தலைவி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய ஆறு. திருமுருகன் தொடர்ந்து கூறியதாவது:-

இந்த ஆலயத்தில் எத்தனையோ புனிதமான கைங்கரியங்கள் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. அந்தவகையில், யாத்திரிகர் மடம் திறந்துவைக்கப்பட்டதன் மூலம் மேலும் ஒரு புனிதமான பணி இந்தப் புனித பூமியில் நிறைவேறியுள்ளது.

அம்மா இங்கு ஒரு யாத்திரிகர் மடம் அமையவேண்டும் என நீண்ட நாள்களாகக் கண்டகனவு இன்று நிறைவேறியுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிகள் உட்படத் தென்னிலங்கையில் இருந்துவரும யாத்திரிகர்களும், வெளிநாடுகளில் இருந்து வரும் யாத்திரிகர்களும் கூட இங்கு தங்கிச் செல்வதற்கு யாத்திரிகர்கள் மடம் இருக்கவேணடும் என்று வலியுறுத்தி வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரினதும் விருப்பம் இன்று நிறைவேறியுள்ளன.

யாழ். குடாநாட்டில் கீரிமலையில் இருந்த சடையம்மா மடம், சிறப்பர் மடம் என இருந்த பல மடங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, தொண்டைமானாறுப் பகுதியில் சந்நிதி ஆலயத்தில் அமைந்திருந்த பல மடங்களும் அழிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வரும் அடியார்கள் தங்க இடமில்லாத நிலைமை காணப்பட்டது.

துர்க்கையம்மன் ஆலயச் சுற்றாடலில் இன்று திறந்துவைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் மடம் மூலம் இக்குறைகள் ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.


இந்த மடத்தை அழகுபடுத்த தென்னிந்தியாவில் உள்ள மாமல்லபுரத்தைச் சேர்ந்த ஞானவேல் சிற்பி தலைமையில் சிற்பிகள் வந்து இந்த மடத்தின் முகப்புத் தோற்றத்தை மிகவும் அழகுற நிர்மாணித்துள்ளார்கள்.

இந்த யாத்திரிகர் மடம் மிகவும் சமயாசாரப்படி இருப்பதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். முதலில் துர்க்கா கோட்டம் இவ்வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது யாத்திரிகர் மடம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவைகள் மூலம் பல புனித பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கலாநிதி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது தலைமையுரையின் போது:-

இம்மண்டபத்தின் பணிகள் பூர்த்தி அடைவதற்கு சிங்கள அன்பர்கள் 15 பேர் நிலவேலையைப் பூர்த்திசெய்துதந்துள்ளார்கள். கடந்த 30 ஆண்டுகளில் பல திருப்பணி வேலைகள் இங்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தவகையில், இந்த யாத்திரிகர்மட நிர்மாணத் திருப்பணியும் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆறு. திருமுருகன் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பிய



போது அங்கிருந்துகொண்டு வந்த நிதியின் மூலம் இந்த யாத்திரிகர் மடத்திற்கான அத்திபாரக் கல் நாட்டப்பட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து அன்பர்கள் பணம் என்று கேட்காமலே கையளித்த பணத்தின் மூலம் இவ் யாத்திரிகர் மடத்தின் பணிகள் யாவும் பூர்த்தி அடைந்துள்ளன எனவும் குறிப்பிட்டார்.

ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆசியுரையாற்றும் போது:-

ஆலயங்கள் என்பது ஏனையவர்களுக்கு உறுதுணையாக அமைந்திருக்க வேண்டும். இந்த ஆலயம் இந்த வகையில் பல்வேறு உதவிகளையும் பலதரப்பினருக்கும் மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு சமூக, சமயப்பணிகளையும் காலத்திற்குக் காலம் மேற்கொண்டுவரும் இந்த ஆலயத்தின் பணிகளில் நாமும் கலந்துகொள்வதன் மூலம் பெரும் பேறு பெற்றவர்களாகக் காணப்படுகின்றோம் - என்றார்.

சிவஸ்ரீ செந்தில் ராஜக்குருக்கள், சிவஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள் மற்றும் கே.கே.சுப்பிரமணியம் ஆகியோர் ஆசியும், வாழ்த்தும் கூறினார்கள். (86-202)

# கிழக்கின் பதற்ற நிலைமையை வடக்கிலும் பரப்ப முயல்கிறார்கள்

## எச்சரிக்கிறார் விரிவுரையாளர்

யாழ்ப்பாணம்,ஓக.30

விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதில் சர்வதேச நாடுகளுக்கும் அதிக நாட்டம் உண்டு என்று தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் துறைசார் மாதாந்தக் கருத்தரங்கு ஆரிய குளத்தில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இடம் பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

சமூக விஞ்ஞான ஆர்வலர் எஸ்வேல்தஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் கணேசலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் அடிப்படைப் பண்புகளான கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சிதைப்பதில சர்வதேச சமூகங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, அமெரிக்க சார்பு நாடுகளாக நோர்வே, டென்மார்க், ஐரோப்பிய யூனியன் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

வடக்கு - கிழக்கில் ஐரோப்பிய யூனியனின் பிரசன்னம் வித்தியாசமாகவுள்ளது. அது அமெரிக்காவுடன் இணைந்து எமது பிரச்சினைகள் தொடர்பாகச் சில முடிவுகளை எடுக்க முனைகின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை இனப்பிரச்சினைகள் விடயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கருணா என்ற தனி நபரால் ஏற்படுத்தப்பட்ட இந்த மாற்றம் எம்மை ஆரம்ப காலகட்டத்துக்கே கொணடு சென்றுள்ளது. அதிலிருந்து எமது இனத்தை மீளவும் கட்டியெழுப்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தற்போது எமக்கு ஏற்பட்டுள்ளது.

கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்தப் பதற்றமான சூழ்நிலையை வடபகுதிக்கும், குறிப்பாக யாழ். குடாநாட்டிற்கும் பரவச்செய்வதற்குப் பல தீய சக்திகள் முனைந்துவருகின்றன.

தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரை அங்குள்ள கட்சிகளிடம் கிழக்கு நிலைவரம் தொடர்பாக ஒரே கருத்தே காணப்படுகின்றது. அவ் விடயத்தில் கருத்து வேறுபாட்டுக்கு இடமே இல்லை.

கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதம் தொன்றுதொட்டே செயற்பட்டுவந்துள்ளது. அதன் பரிணாம வளர்ச்சியே தற்போதைய நிலை.

இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைச் சர்வதேச ரீதியாகப் பலவீனப்படுத்தி கட்டுப்படுத்த முயற்சிசெய்துவருகிறது. எமது மண்ணில் உள்ள சில புத்திஜீவிகள் தமது சுயதேவைகளுக்காக - ஒட்டுமொத்த அரசியல் இலாபங்களுக்காக - அரசின் அடிவருடிகளாகவும் புலனாய்வாளர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர். கிழக்கில் இந்த நிலைமையே அதிகமாகக் காணப்படுகிறது. மேற்குலக நாடுகள் தற்போது இங்கு ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தச் சூழலைத் தமது இராஜதந்திர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றன. இன்றைய சூழலில் தமிழர்களுக்கு எந்தவித விமோசனமும் ஏற்படவில்லை என்பதுதான் யதார்த்தம். சமாதானத்திற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறிக்கொண்டு யுத்தத்திற்கான தயார்ப்படுத்தல்களில் அனைத்துத் தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர். சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளையும் மக்களையும் பிரிதது அவர்களை அரசியல, பொருளாதார ரீதியாகப் பலவீனப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவற்றிற்கு இடங்கொடாமல் அனைவரும் செயறபடவேண்டும் - என்றார். (ப-5)

# கல்விநிலை மேன்மையடைய ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்

## உதவிக் கல்விப் பணிப்பாளர்

அச்சுவேலி,ஓக.30

'கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் கல்வித் தரத்தை மீண்டும் மேல்நிலை அடையச்செய்வதற்குச் சகல தரப்பினரும் சேவை மனப்பாங்குடன் உணர்வுபூர்வமாக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய்க கோட்டத்தின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இந்நிலை மிகவும் கவலை அளிப்பதாக அமைந்துள்ளது."

- இவ்வாறு கூறினார் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் இடைநிலைக் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னராணி வேதநாயகம்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கோப்பாய கோட்டப் பாடசாலை அதிபர்கள், 9 ஆம், 10 ஆம, 11 ஆம் தர வகுப்புகளுக்குக் கல்விகற்பிககும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

கோப்பாய்க்கோட்ட கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு திருமதி அன்னராணி வேதநாயகம் தொடர்ந்து உரையாற்றும்போது:-

யாழ்ப்பாணக் கல்விவலயத்தில் உள்ள மூன்று கல்விக்கோட்டங்களில் ஒன்றான கோப்பாய்க் கல்விக்கோட்டம் கல்வித்தரத்தில் குறைவடைந்து செல்கின்றது. இதனைப் பரீட்சை முடிவுகளும் மாணவர்களின் அடைவுமட்டம் தொடர்பான அவதானிப்புகளும் எடுத்துக்காட்டுகின்றன. இந்தநிலை வரவேற்கத்தக்கதல்ல.

இதனை மேல்நிலைப்படுத்துவதற்கான சில திட்டங்களை மாகாணமட்டத்தில் சிபார்சு செய்துள்ளேன்.

இழந்த கல்வித் தரத்தை மீண்டும் கட்டியெழுப்பி மேல்நிலை அடையச்செய்வதற்கு அதிகாரிகள், அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் எனக் கூறினார். (ப-11)




# தமிழிற்கும் சைவத்திற்கும் பெரும் பணியாற்றிய குலபதி கந்தையா

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நல்ல சமுதாயத்தை உருவாக்க, சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் பேணிப்பாதுகாக்கப் பல செயற்றிட்டங்களைத் தீட்டிய பெருமை குலபதி ஆறுமுகம் கந்தையாவையே சாரும். அவர் விட்டுச் சென்ற பணியைச் சைவமக்கள் தொடரவேண்டும.

கைதடி கிழக்கில் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்ற ஆறுமுகம் கந்தையாவின் நினைவு அஞ்சலி நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய தென்மராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

தமிழ் மக்களிடையே சைவ சமய அறிவு, அதன் பண்புகள் அற்றுவிடக் கூடாது என்ற நோக்கில் பல சமய நிகழ்வுகளைக் கிராமங்கள் தோறும நடத்தினார். சமூகப் பணியாக அஸ்டலக்சுமி பதிப்பகத்தை ஆரம்பித்துச் சிறுவர்களுக்கான பக்தி நூல்கள், நீதி நூல்கள் போன்றவற்றை வெளியீடு செய்தார். சைவமக்கள் சமய ஒழுங்கு நெறிகளைப் பின்பற்றுவதுடன் தேவார பாராயணத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என்று பொதுக்கொள்கை கொண்டிருந்தார். 1998 ஆம் ஆண்டு 'தமிழ் வேதத் திரட்டு' என்ற நூலை வெளியிட்டுவைத்தார். வறுமையில் வாடும் சைவச்சிறார்களின் நலனைக் கருத்திற்கொண்டு கைதடிப் பகுதியில் அரச காணியில் சைவச் சிறுவர்களுக்கான 'சைவச் சிறுவர் இல்லத்தை' ஆரம்பித்து அங்கு சிறுவர்களைப் பராமரித்த பெருமை அவரையே சாரும். இதன்மூலம், சமயக் கல்வி முறையுடன் கூடிய சிறார்களின் நல்வாழ்விற்கு வித்திட்டார். இன்றும் இந்தச் சைவச் சிறுவர் இல்லம் பிரகாசிப்பதைக் காணலாம். சைவசிறுவர் இல்லத்தில் ஸ்ரீ நடராசப் பெருமானின் உருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்து சிவபூசையும் நடைபெற்று வந்தது. இந்த நடராசப் பெருமானின் சிலை திருக்கேதீஸ்வரத்திலிருந்து கால் நடையாக பஜனையுடன் கைதடிக்கு எடுத்துவரப்பட்டு பூசிக்கப்பட்டது.

இதேவேளை, உலக நாடுகளில் வாழும் தமிழ குழந்தைகளின் கல்விக்காக தமிழ் சைவப் புத்தகங்களை வெளியீடு செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி சமயப் பணிகளை விஸ்தரித்தார்.

அன்னாரின் சமய தமிழ் பணிகளுக்காக இந்தியப் பல்கலைக்கழகம், குலபதி, 'கலாநிதி', பட்டங்களை வழங்கிக்கௌரவித்தது. சமூக சமயப் பணிகள் செயற்பாட்டால் நீதி அமைச்சு அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது. இவரது தொடர் பணிகளால் எமது பிரதேசம் அவரது நாமத்தை இலகுவில் மறந்துவிடமுடியாது. அவர் விட்டுச் சென்ற பணியை எமது சமூகமும் நாமும் தொடர வேணடும் எனக்குறிப்பிட்டார். (ப-31)

# முன்பள்ளிகளின் குறைகளை மக்கள் தீர்த்துவைக்கவேண்டும்

வலி.கிழக்கு,ஓக.30

மாணவர்களின் கல்விக்கு அடித்தளமாக அமைவது முன்பள்ளிகளே என்று தெரிவித்தார் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் ஆர்.இராசதுரை.

அண்மையில் இருபாலை புதிய செம்மணி வீதி ஞானவைரவர் கோயிலடி ஞானஒளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஞான ஒளி சனசமூக நிலையத்தின் தலைவர் ரி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒரு குழந்தை, பெற்றோரின் அரவணைபபில் இருந்து விடுபட்டுத் தனது கல்வி வாழ்க்கைக்கு முதல் முதல் காலடி எடுத்து வைக்கும் இடமாக முன்பள்ளிகளே அமைகின்றன.

அந்தவகையில், முன்பள்ளிகளின் குறைகளை, நிறைகளைச் சீர்ப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது அந்தந்தக் கிராம மக்களதும் பொது அமைப்புக்களதும் கடமையாகும். இன்று இந்த முன்பள்ளியில் கல்விபயிலும் மாணவர்கள் தான் எதிர்காலத்தில் இந்தக் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகத் தலைமை வகித்து கிராமத்தை மேமபடச் செய்பவர்கள். எனவே, கிராமந்தோறும் உளள முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் குறைகளிலும் மக்களே கவனம் எடுக்க வேண்டும். இதேவேளை, கிராமப் புறங்களில் குடிசைகளில் வசிக்கும் மாணவர்கள் ஏன் பல்கலைகழகம் செல்ல முடியாது? ஏன் உத்தியோகம் பாாக்க முடியாது? குடிசைகளில் வசிப்போரும் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், உத்தியோகம் பாாக்கவேண்டும் இது பெற்றோர்களுடைய கையில் தான் உள்ளது என்றார்.

நல்லூர் ஞானோதயா வித்தியாலய அதிபர் எஸ்.இராசலிங்கம், இருபாலை தெற்கு சமுர்த்தி உத்தியோகததர் ஏ.ஜெயசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள். (ப-180)

# யா/திருக்குடும்பக் கன்னியர்மட அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் இறைபணி, கல்விப்பணி வாழ்வின் அகவை அறுபது நிறைவுச் சிறப்புமலர் - 30.08.2004

## யாழ்.ஆயரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அதிபர் பணியில் அகவை அறுபதை நிறைவுசெய்யும் அருட்சகோதரி மத்தாயஸ் யோலண்ட் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். யாழ்ப்பாணத்தில் பெண்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் துணையாக இருக்கும் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை; பாராட்டப்படவேண்டியவை; சரித்திர ஏடுகளில் பதிவுசெய்யப்படவேண்டியவை.

யாழ். திருக்குடும்ப ஆங்கில – தமிழ் பாடசாலைகளை இணைத்துத் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்த இவர் எடுத்த பிரயாசைகளை நாம் நன்கு அறிவோம். இவரின் கனவுகள் நனவாகும் என்றே நம்புகின்றோம்.

இவர் தனது அறிவையும் அனுபவத்தையும் தொடர்ந்தும் தமிழ்ப் பெண்களின் தொடர் உருவாக்கத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும் என வாழ்த்தி இறையாசி வேண்டுகின்றோம்.

**யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.**

## தென்னிந்திய திருச்சபைப் பேராயரின் வாழ்த்துச் செய்தி

திருக்குடும்பக் கன்னியர்மடம் நம் நாட்டுப் பெண்களின் அறிவு வளர்ச்சியிலும் ஆன்மீக வளர்ச்சியிலும் கலாசார வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ளது. இக்கன்னியர்மடக் கலைக்கோயிலை வளர்த்த பெருந்தலைவிகள், தியாகிகள் வரிசையில் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களுக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

முப்பத்துநான்கு வருடங்கள் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் அதிபராகவும் சேவையாற்றிய அருட்சகோதரியின் தியாகத்திற்கும் உழைப்பிற்கும் தமிழ்ப்பெண்கள் என்றுமே கடமைப்பட்டவர்கள்.

இறைபணிக்கும் மக்கள் பணிக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்த அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் இன்னும் பல வருடங்கள் சிறப்புடன் வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**எஸ். ஜெபநேசன்,**
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை.

## வழிப்படுத்தி நெறிப்படுத்தியவர்

ஆசிரியர் ஞானவிளக்கு என்ற சொற்பதத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து கல்விப்பணிக்காகவும் கடவுள் பணிக்காகவும் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் ஆற்றிய பணி அளப்பரியது.

கடந்த பதினாறு ஆண்டு காலம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையில் கடமைபுரிந்து அப்பாடசாலையைப் பிரபல பாடசாலைத் தரத்தினில் பேணுவதற்காக ஆசிரியர்களை வழிப்படுத்துவதிலும் மாணவிகளை நெறிப்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளார்.

அகவை அறுபதை நிறைவு செய்யும் அருட்சகோதரி இதுவரை கல்விப்புலத்துக்கு ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவதுடன், சிறந்த தேகாரோக்கியத்துடன் நீண்டகாலம் இறைபணிபுரிய வாழ்த்துகிறேன்.

**ப.விக்னேஸ்வரன்**
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## அரச அதிபரின் வாழ்த்து

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட அதிபர் சங்கைக்குரிய சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்கள் தனது அகவை அறுபதை நிறைவுசெய்ததை முன்னிட்டு அவரது சேவையைப் பாராட்டி எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

யாழ். நகரில் மிக முன்னணி வகிக்கும் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலை இவரின் ஆளுமையினாலும், ஆற்றல் மிக்க சேவையினாலும் அதன் தரம் கல்வியிலும் கலை கலாசாரம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. விசேடமாக, பாடசாலை மாணவிகளின் ஒழுக்கத்தைப் பேணி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றை அணிகலன்களாகத் திகழத்தக்க சிறந்த மாணவிகளை இக்கல்லூரி மாணவிகளின் ஆங்கில அறிவை வளர்ப்பதில் அக்கறைகொண்டு சேவையாற்றியவர் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இவர் சமூகத்திற்குத் தனது சேவையைத் தொடர்ந்தும் ஆற்ற இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**செ.பத்மநாதன்**
அரச அதிபர், யாழ். மாவட்டம்.

## பழைய மாணவர் பாராட்டுகின்றனர்

**யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடத்தின் அதிபராக பதினாறு வருடம் சேவையாற்றி அகவை அறுபதை நிறைவு செய்யும் எமது அதிபர் அருட்சகோதரி யோலண்ட் அவர்களுடைய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி அவருக்கு எமது அன்பையும் மதிப்பையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**அவரது சேவை மேலும் தொடர அவருக்கு உடல், உள நலமும் நீடிய ஆயுளும் நல்க இறையாசி வேண்டி நிற்கிறோம்.**

**பழைய மாணவர் சங்கம்**
**யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்**

அனுசரணை:
ஆசிரியர் கழகமும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
மாணவர்களும்.



அதிபர் அருட்சகோதரி
யோலண்ட் மத்தாயஸ்
**B.A.(Cey.), Dip. in Edu. (University of Colombo)**
**Educational Management (Maharagama)**
**M.A. (University of Jaffna) S.L.P.S. I**

## வாழ்க்கைக் குறிப்பு

அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ்

பிறப்பு: 1944.08.30, கரவெட்டி

கல்வி: ஆரம்பக் கல்வி 1-5 கரவெட்டி, திரு இருதயக் கல்லூரி
6-9 தெகிவளை, திருக்குடும்பக் கன்னியர்மடம்
10-11 யாழ். இளவாலை, திருக்குடும்பக் கன்னியர்மடம்
12-13 யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்

உயர்கல்வி:
1969 – கலைமாணி – பேராதனைப் பல்கலைக்கழகம்
1978 – கல்வி டிப்ளோமா – கொழும்பு பல்கலைக்கழகம்
1990 – கல்வி முகாமைத்துவ டிப்ளோமா – தேசியக் கல்வி நிறுவனம் – மகரகம
1991 – முதுகலைமாணி – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1998 டெல்கி, அதிபர்களுக்கான முகாமைத்துவக் கல்வி–மாநாட்டில் வடமாகாண ப் பிரதிநிதி

ஆன்மீகம்:
1961 க.பொ.த.(சா.த.) பரீட்சை சித்தி எய்தியதும் தேவ அழைத்தல்
18.06.1963 - முதலாம் அர்ப்பணம்
08.09.1967 - நித்திய அர்ப்பணம்

* ஆசிரிய சேவை
1970-1977 யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்
1978-1981 மன்/பெரிய பண்டிவிரிச்சான்
1981-1982 மன்/புனித சேவியர் பெண்கள் பாடசாலை
1982-2004 யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
1984 - உப அதிபர்
1988 - அதிபர் - திருக்குடும்ப கன்னியர்மடம்
2002 - பாடசாலைகள் இணைப்பின் பின் அதிபர்

இதரசேவை
* முதுகலைமாணி பயிற்சிநெறி - வரவுவிரிவுரையாளர் - யாழ். பல்கலைக் கழகம்
* திருக்குடும்ப சபை வடமாகாண ஆலோசகர்

## பாடசாலை முன்னேற்றச்செயற்பாடுகள்

மாணவர் உருவாக்கல் விருத்திச் செயற்பாடுகள்:
1. வாரத்தில் ஒருநாள் காலை ஒன்று கூடலில் தியானப்பயிற்சி வழங்கல்.
2. ஆன்மீக, இலக்கிய, அறிவியல் கருத்தரங்குகள் ஒழுங்குபடுத்தல்.
3. வகுப்பு ரீதியாக மாலைநேர விசேட ஆங்கிலப் பயிற்சி வழங்கல்.
4. மாணவர் முன்னேற்ற ஆலோசனைக்காக மாதாந்தம் பெற்றோர் சந்திப்பை மேற்கொள்ளல்.
5. வருடாந்தம் பரிசளிப்புவிழாவை ஆவணப்படுத்தத் தக்கவகையில் ஒழுங்குபடுத்தல்.
6. உள்ளக, வெளியரங்க பெண்களுக்கான அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றலை உறுதிப்படுத்தல்.
7. தினைக்கள ஆங்கில, தமிழ்த்தினப் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற ஊக்குவித்தல்.
8. 1998 இல் பாரிய கல்விக் கண்காட்சியை நடத்தியமை.
9. 2002 இல் யா/கன்னியர்மட வித்தியாலயத்தை உள்வாங்கித் திறம்பட நிர்வகித்தல்.
10. 2004 ஆம் ஆண்டு பாடசாலை நூற்றி நாற்பதாவது ஆண்டுநிறைவை சிறப்பாகக் கொண்டாடியமை.

பௌதிகவள விருத்திச் செயற்பாடுகள்:
1. நூலகம் - கட்புல, செவிப்புல, கேட்போர் கூடம் உள்ளடங்க புனரமைப்புச் செய்யப்பட்டமை.
2. மாணவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை நிலையம் அமைத்துக்கொடுத்தல்.
3. தனிப்பட்ட உதவிச் சேகரிப்பு ஊடாக மின்பிறப்பாக்கி, தளபாடங்கள், கொள்வனவு செய்யப்பட்டமை.
4. கணனி அறை, பாலர் செயற்பாட்டு அறை ஒழுங்கமைத்தமை.
5. மூன்று மாடிக் கட்டடத்துக்கான தளமாடியை நிறைவுசெய்தல்.
6. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை வழி நடத்தித் தண்ணீர்த் தாங்கி, வலைப்பந்தாட்டத்திடல் கட்டி முடித்தமை.
7. திறந்தவெளி கலையரங்கத்தை நவீன கலை அரங்காக மாற்றி அமைத்தமை.
8. மேலைத்தேய, கீழைத்தேய வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்து, பாடசாலை இசைக்குழுவை அமைத்துப் பயிற்சி வழங்கியமை.
9. லண்டன், கனடா, ஆஸ்திரேலியப் பழைய மாணவர் சங்கக் கிளைகளை அமைத்து பாடசாலை செயற்பாடுகளில் ஒன்றிணைத்தமை.

## இனிய சுபாவம் கொண்டவர்

யாழ். திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். மாவட்டத்தில் கத்தோலிக்கப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்காகத் திருக்குடும்பச் சபையினால் 1962இல் அடியிடப்பட்ட முதற் பாடசாலையின் பல்விதநோக்கையும் பிரமாணிக்கத்துடன் பின்பற்றி நற்பிரஜைகளை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டார். இயற்கையிலே அமைதியான போக்கும் இனிய சுபாவமும் கொண்ட இவர், அக்காலத்திலே இளமைத்துடிப்பும் அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் கொண்டவராக மாணவர்களை நெறிப்படுத்திவந்தார்.

1988இல் பாடசாலையின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்ற காலம்முதல் சவால்களை எதிர்கொண்டு இறைபராமரிப்பால் பாடசாலையை முன்னெடுத்துச் சென்றவர்.

இன்று ஒழுக்கத்திலும் பரீட்சைப் பெறுபேறுகளிலும் விளையாட்டுத்துறையிலும் கலை, கலாசார நிகழ்வுகள் வெளிக்கள முயற்சிகளிலும் இப்பாடசாலைக்குக் கிடைத்துள்ள வளர்ச்சிகள் அனைத்தும் அவரையே சாரும்.

இன்றுவரை அயராது உழைத்துத் தனது அறுபதாவது அகவையில் தடம்பதிக்கும் எம் சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு, அவரின் வாழ்வும், பணியும், தொடர்ந்து சிறக்க இறை ஆசீர் வேண்டி நிற்கின்றேன்.

**சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்,**
மாகாணத் தலைவி

## சிவத்தமிழ்ச் செல்வியின் இதயத்திலிருந்து...

கடவுள் பணியாகக் கல்விப் பணியை நேசித்த அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் தூயவாழ்க்கையையும் அம்மையாரின் ஆளுமைத் திறன்களையும் பலரும் புகழ்ந்துரைக்கக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

கல்வியோடு கூடிய ஒழுக்கத்தையும் கடவுள் வழிபாட்டையும் மாணவர்களுக்கு நெறிப்படுத்துவதில் முதன்மையானவராகக் கருதப்படும் அம்மையார், தனது ஓய்வுகாலத்திலும் நிறைபணி தொடரப் பிரார்த்திப்பதோடு, அவர் சீரிய ஆரோக்கியத்துடன் திகழ இறைவனை இறைஞ்சி வாழ்த்தி அமைகிறேன்.

**சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
*(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*

## அதிபர் சங்கத் தலைவரின் வார்த்தைகள்

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட அதிபர் மதிப்பிற்குரிய அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் அறுபதாவது அகவை நிறைவையிட்டு அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். தன் ஆளுமைத்திறத்தால் பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசென்று இன்று புகழ்பூத்த, தலைநிமிர்-கல்விக் கூடமாக மாற்றிய பெருமை அவரையே சாரும். கண்டிப்புடன் கூடிய நிர்வாகத் திறனும், இறைபக்தியுடன் கூடிய தாயன்பும் எடுத்த கருமங்களை நிதானமாகச் செவ்வையாக மற்றையோர் பாராட்டத்தக்க வகையிலே செய்து முடிக்கவேண்டும் என்ற திண்ணிய மனமும் பரபரப்பில்லாத அமைதிப் போக்கும் நேரம் தவறாமையும் சக அதிபர்களையும் நிர்வாகிகளையும் சக ஆசிரியர்களையும் மதித்து யாவரையும் இணைத்துச் செயற்படவேண்டும் என்ற மனப்போக்கும் இவரிடம் நான் கண்ட நடத்தைக் கோலங்களாகும்.

அதிபர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகச் சுட்டிக்காட்டப்படக் கூடிய அதிபர் தொடர்ந்தும் கல்விப் பணியும் இறைபணியும் ஆற்றி, சமூகப்பணி செய்ய அவருக்கு நீண்ட ஆயுளையும் தேகசுகத்தையும் எல்லாம்வல்ல இறைவன் ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.

**N.வன்னியசிங்கம்**

## St. Patrick's College Rector Massage...

I remember very well my first meeting with Sr. Yolande at Peradeniya University Campus in 1968. I found her to be a pleasant and affable person with a noble heart to help others always. My two younger sisters had the privilege of studying under her and still value her guidance and friendship they recieved from her at HFC when Sr. yolande was on the tutorial staff in the early seventies. She took over the Principal post in 1988 when the school had become a government school and, thus, had to adjust to the new set up and keep the old girls' associations alive as well. Furthermore, she had to guide the destiny of the school at the most turbulent times in the history of the institution. Well, she had the faith and dedication to steer through all those difficultdays and keep up the familian spirit alive. She rallied round the old girls' associations abroad and found their assistance to put back the school on track. The past pupils associations all over the world remembers her dedicated service to the school with a greatful heart.

Sr. Yolande had to weather impossible problems including a full blown war and two displacements and she emerged unscathed to gather fresh laurels; all due to her dynamic faith and practical wisdom. Recently she steered through the amalgamated school, updating it according to the demands of modern Educaiton.

We thank god for the 34 years of dedicated service of Sr. yolande to the Holy Family convent. We wish that God Almighty will continue to bless her endeavors in the future as well.

Well done Sr. Yolande! May God go with you.

Revd. Dr.Justin B.Gnanapragasam
Rector, St.Patrick's College, Jaffna.

(சி-37322) (24-11-16)

# கிளிநொச்சி தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் அடுத்த மாதம் திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த திருக்குறள் மாநாடு அடுத்த மாதம் 26, 27ஆம் திகதிகளில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்முறையும் இம்மாநாட்டைப் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பேராசிரியர்கள் மற்றும் துறைசார்ந்த அறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்தத் திருக்குறள் மாநாட்டின் போது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திறமையான மாணவர்கள் மற்றும் துறைசார்ந்த புலமையாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, பின்வரும் பரிசுகளுக்குத் தகுதியுடைவர்கள் உடன் தொடர்புகொள்ளுமாறு தமிழ்ச் சங்கச் செயலாளர் வே.பரமநாதபிள்ளை கோரியுள்ளார்.

இவை யாவும் 2003ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் 2004 ஜுன் வரையான காலப்பகுதியில் நடந்திருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரத் தேர்விலும், 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரத் தேர்விலும் தமிழ்ப் பாடத்தில் அதிதிறமை பெற்ற மாணவர்கள்.

★ பூப்புனித நீராட்டல், திருமணம், திருவிழா ஆகிய அறிவித்தல்களில் திருவள்ளுவர் ஆண்டைக் குறிப்பிட்டுத் தூய தமிழில் அழைபபிதழ்களைப் பதிப்பித்தவர்கள்.

★ தமிழ்ச் சைவமுறைப்படி தமிழில் திருமணம் செய்து கொண்டவர்கள், பிள்ளைகளுக்குத் தமிழில் திருமணம் செய்து வைத்த பெற்றோர்கள். பிள்ளைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர் வைத்தோர்.

★ இக்காலப் பகுதிக்குள் தேசிய மட்டத்திலும் வடக்கு - கிழக்கு மாகாணமட்டத்திலும் தமிழ் நாள் கலைத்திறன் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள்.

★ இப்பரிசுகளைப் பெறத் தகுதியானவர்கள தகுதிவாய்ந்த உயர் மேலாளர்களின் விதந்துரையுடனும் உரிய ஆவணங்களுடனும் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை -

இந்த மாநாட்டில் பங்கு பற்றிப் பயன்பெற விரும்புவோர் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பே.பரமநாதபிள்ளை, செயலாளர், கிளிநொச்சி தமிழ்ச்சங்கம், இல. 140, 5ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(4-305)

## துணுக்காய் விநாயகர் கும்பாபிஷேகம் இன்று

துணுக்காய்,ஓக.30

துணுக்காய், கல்விளான் அரசடி விநாயக ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

நேற்றுமுன்தினம் இயந்திரபூசையும், நேற்று பிற்பகல் 3 மணிக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவமும் இடம்பெற்றன. இன்று காலை 5 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூசை, பூர்ணாகுதி, தீபாராதனையும் மாலை கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மண்டலாபிஷேகம் 12 நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

(4-302-202)

# இரணைமடுப் பகுதியில் நெற்பயிர்கள் தண்ணீர் இல்லாததால் கருகி நாசம்



பரந்தன்,ஓக.30

இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதிகளில் இந்த வருடம் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்பயிர்கள் கதிர்வந்த நிலையில் தண்ணீர் இல்லாமற்போனதால் எரிந்து நாசமாகிச் சாய்ந்து கிடப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

ஒன்றிரண்டு ஏக்கரல்ல.... பலநூறு ஏக்கர் நெற்பயிர்கள் கருகி நிலத்தில் சாய்ந்து கிடக்கின்றன.

அறுவடைக்குமுன்னர் ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா வரையான பணத்தினைச் செலவளித்த விவசாயிகள் செய்வதறியாது திகைத்துப் போயிருக்கின்றனர்.

மேற்படி நெற்பயிர்களுக்கான தண்ணீர் விநியோகம் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகிய இரண்டையும் மேற்கொண்ட கமக்கார அமைப்பினர் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் கவலையீனமானதும் அக்கறையீனமானதுமான செயற்பாட்டினாலேயே தங்களுக்கு இந்த அவலமும் நஷ்டமும் ஏற்பட்டது என்று விவசாயிகள் மத்தியில் பெரும் அதிருப்தியும் கவலையும் நிலவுகிறது.

இது இவ்வாறு இருக்க, விவசாயிகளை ஒழுங்கமைத்து நீர்முகாமைத்துவம் செய்யும் கமக்கார அமைப்புத்திட்ட உபகுழு போன்ற அமைப்புக்களின் கட்டுப்பாடுகளை மீறி அனுமதிக்கப்பட்டதைவிடக் கூடுதலாகப் பல ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டனர் என்றும் -

தற்போதைய வரட்சியால் அந்த வயல்களும் கூட எரிந்து நாசமாகியுள்ளதால் விவசாயிகளின் நட்டம் பலமடங்காகியிருக்கிறது என்றும் - விவசாயிகளில் மற்றொரு சாரார் உதயனுக்குச் சுட்டிக்காட்டினர்.

(4-352)

# சைக்கிள்களில் சமாந்தரமாக சவாரி செய்வோர் கைதாவர்

## கிளிநொச்சியில் காவல்துறை நடவடிக்கை

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி நகரப் பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணஞ்செய்வோர் தமிழீழக் காவல்துறையால் கைதுசெய்யப்படுவர் என்று தமிழீழக் காவல்துறையின் வாகன போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி நகரப் பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணம் செய்துவருகின்றவர்களால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதன் காரணமாகவே அதிகளவு வீதி விபத்துகள் இடம்பெற்று வருகின்றன.

இனிவரும் நாள்களில் வீதிகளில் சைக்கிளில் சமாந்தரமாகப் பயணஞ்செய்பவர்கள் தமிழீழக் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டுத் தமிழீழ நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை -


பயணிகள் சேவையில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் ஒரே தடவையில் மூன்று பயணிகளை ஏற்றிச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது - என்றார். (4-7)

## முன்பள்ளிக்கு அடிப்படை வசதிகள்

வட்டக்கச்சி,ஓக.30

வட்டக்கச்சி அறிவுச் செல்வன் முன்பள்ளியில் பொதுக்கிணறு ஒன்றினையும் மலசலகூடம் ஒன்றினையும் அமைப்பதற்குக் கிளிநொச்சி புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

இதற்கான நிதி உதவியினை 'ஒக்ஸ்பாம் நிறுவனம்' வழங்க முன்வந்துள்ளது. இவற்றை அமைப்பதற்கான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (4-405)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் செயற்றிறன் மதிப்பீட்டில் இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையம் மூன்றாம் இடத்தினைப் பெற்றது. உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பரிசில் வழங்க அதனைக் கலைச்சுடர் சனசமூக நிலையத் தலைவர் சு.இரவீந்திரன் பெற்றுக் கொள்வதையும் கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி தி.அன்னலிங்கம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*




# மாவடி மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு விசேட திட்டம்

வட்டக்கச்சி,ஓக.30

இராமநாதபுரம், மாவடிக் கிராம மக்களின் வருமான அதிகரிக்கும் திட்டம் ஒன்றினைக் கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனம், 'போரூட்' நிறுவன நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடந்தமாதம் மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் மாவடிக் கிராம மக்களை நேரடியாகச் சந்தித்துப் பொருத்தமான 47 பயனாளிகளைத் தெரிவுசெய்தனர். இதன்போது ஆதரவற்றோரும் மிகக்குறைந்த வருமானமுடையோரும் கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினரும் விசேட கவனத்தில் எடுக்கப்பட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் நெற்செய்கைக்காக 30 பயனாளிகளும், மாடு வளர்ப்பிற்காக 03 பயனாளிகளும், ஆடு வளர்ப்பிற்காக 05 பயனாளிகளும் சிறுவியாபாரத்திற்காக 09 பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கு உரிய தொழில்களுக்கான உள்ளீடுகளை வழங்கும் பணியில் கிளிநொசசி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (4-405)

## வறிய மக்களுக்கு மலசலகூடம்

வட்டக்கச்சி,ஓக.30

வட்டக்கச்சி மாயவனூர் கிராம மக்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக்கொடுக்க கிளிநொச்சி கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காகத் தற்போது தற்காலிகமாக மலசலகூடங்களைப் பயன்படுத்தும் - குறைந்த வருமானம் பெறும் 40 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதற்கான நிதியினை 'ஒக்ஸ்பாம் நிறுவனம்' வழங்கவுள்ளது.

(4-405)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு வைத்திய நிபுணர் நியமனம்

வட்டக்கச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் காது, மூக்கு, தொண்டைக்கான வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கலாநிதி றொபேட் பெஞ்சமின் என்பவரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்தில் பணியாற்றிய இவர், யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் பணியாற்றியவர்.

இவர் மேற்படி வைத்தியசாலைக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளமையால், தொடர்ந்து பணியாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனப் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

(4-405-204)

# நெல் உடைக்கும் நவீன ஆலை கல்மடு நகரில் திறந்து வைப்பு

பரந்தன்,ஓக.30

வடடக்கச்சி, கலமடுநகர் கிராமத்தில் வன்னியின் முதலாவது நவீன நெல் குற்றும் அரிசி ஆலை ஒன்று சேரன் வாணிபத்தினரால் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், நிதித்துறை நிதிப்பொறுப்பாளர் தமிழ்குமரன், அரிசி ஆலையை அமைத்த பொறியியல்துறையைச் சேர்ந்த சேகர், வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், வன்னி வேளாண் தொழில்நுட்பப் பணிப்பாளர் குலம், முகாமையாளர் புவனேந்திரன் மற்றும் கல்மடுநகர் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திறப்பு விழா நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் கருத்துரை வழங்கும்போது தெரிவிக்கையில், வன்னிவாழ் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற அரிசி ஆலைகள் இல்லாததால் உற்பத்தியின் அளவும் மிகக் குறைந்தன. இந்த நவீன அரிசி ஆலைமூலம் ஒரு நாளைக்கு 50ஆயிரம் கிலோ நெல்லைத் தரமான அரிசியாக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்

# மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்குமென்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 2004.09.04 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம். |
| 2004.09.11 | இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி. |
| 2004.09.18 | கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர். |
| 2004.09.25 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி. |
| 2004.10.02 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம். |
| 2004.10.09 | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை. |
| 2004.10.16 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி. |

இதனால், மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
**இலங்கை மின்சார சபை,**
**யாழ். பிரதேச அலுவலகம்,**
**சுன்னாகம்.**

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.

(சி-37317) (24-12-15)

# பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

**1. பணிநிலை: கணக்கு எழுதுநர்**
- ✷ தகைமை: க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல்.
- ✷ சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

**2. பணிநிலை: விலை மதிப்பீட்டாளர் - (ஒப்பந்த அடிப்படையில்)** (புடைவை, இலத்திரனியல், ஊர்தி உதிரிகள்)
- ✷ தகைமை: 01. ஆண்டு - 08
  02. குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு
- ✷ சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**3. பணிநிலை: ஆய அலுவலர் (ஆண்கள்)**
- ✷ தகைமை: க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
- ✷ சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3630 - 4730}{10 \times 110} + 2000$

**4. பணிநிலை: ஆய உதவியாளர் (ஆண்கள்)**
- ✷ தகைமை: க.பொ.த.சாதாரணதரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
- ✷ சம்பள அளவுத் திட்டம்:- $\frac{3080 - 4180}{10 \times 110} + 2000$

**5. பணிநிலை: அலுவலக உதவியாளர்**
- ✷ தகைமை: ஆண்டு - 08
- ✷ சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

**6. பணிநிலை: சமையலாளர்**
- ✷ தகைமை: குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்
- ✷ சம்பள அளவுத் திட்டம்:- $\frac{4210 - 5410}{10 \times 120} + 2000$

**7. பணிநிலை: சமையல் உதவியாளர்**
- ✷ தகைமை: குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்
- ✷ சம்பள அளவுத் திட்டம்:- $\frac{2830 - 3930}{10 \times 110} + 2000$


தகுதியுடையவர்கள் 2004-09-07ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

2004.08.26

**மனிதவள மேலாளர், ஆயப்பகுதி, நிதித்துறை.**

(C-37375/21-12-15)

# விவசாயிகளே! சிற்றுண்டிச்சாலை உரிமையாளரே!



நீங்கள் தினமும் இரத்த வேர்வை சிந்தி உழைத்தது போதும். உங்களுக்குத் தோசை, வடை, சட்டினி, மிளகாய்க் கூட்டு அதைவிட கீரை வகை கடைய ஈரமாக அரைக்கும் இயந்திரம்.

எல்லாமே ஒரு கிலோவுக்கு 3/= ரூபாவுக்கு மேல் செலவு ஆகாது.

உங்கள் வருமானத்தை மூன்று மடங்கு ஆக்க இன்றே விஜயம் செய்யுங்கள். எங்கள் ஸ்தாபனத்திற்கு நவின் கெனடி (சின்னம்) பிறாண்ட் டீசல் என்ஜின் மின்சார மெஷின் மா அரைக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், தோல் நீக்கும் இயந்திரம், மரம் சீவும் வெட்டும் இயந்திரம் ஒரு நாளில் 20 டன் இருந்து 40 டன் வரையும் நெல் குற்றும் இயந்திரங்களும் இவ்வியந்திரங்களுக்கான பெல்ட், பெல்ட் பசை, றெக்ஸ் பினேட் இவை எதுவானாலும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**குறிப்பு : 60% வரையான வங்கிக் கடன் வசதிகள் செய்துதரப்படும்.**

# சமுத்திரா றேடஸ் லிமிட்

**117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,**
**தொலைபேசி இல. 021 222 2938**

தொடர்புகளுக்கு:
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்**
**212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5542**

(சி-37309) (24-12-15-18)

# எமது சருமம்....

எமது தோலானது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பல விதமான தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:-

★ நமது உடலினுள் நோயாக்கிகள் நுழைந்து நோயினை ஏற்படுத்துவதனை தடுப்பதற்கான முதற்கட்ட பாதுகாப்பு அரணாகத் தொழிற்படுகின்றது. தோலின் மேற்படை கெரற்றின் ஏற்பட்ட இறந்த படையாக இருத்தலும் தோலில் நுண் அங்கிகளை விழுங்கும் திண்குழிய செயற்பாட்டில் ஈடுபடும் கலங்கள் காணப்படுவதும் இச்செயல்முறைக்கு உதவுகின்றன.

★ உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்



முகப்பருவினை சரியான முறையில் பராமரிக்காமையினால் முகத்தில் ஏற்பட்டுள்ள நிரந்தர வடுக்களையே படத்தில் காண்கிறீர்கள்.

இரசாயனப் பொருள்கள் புற ஊதாக் கதிர் போன்ற கதிர்வீச்சுக்கள் என்பவற்றில் இருந்து உடலினை பாதுகாத்தல்.

★ உடலிலிருந்து நீர், கனியுப்பு என்பன இழக்கப்படுவதைத் தடுக்கிறது. இதனால் உடலின் நீர்ச் சமநிலை பேணப்படுவதில் முக்கிய பங்காற்றுகின்றது.

★ தோலின் கீழே காணப்படும் கொழுப்புப் படை பிரதான சக்தி சேமிப்பாக விளங்குகின்றது. தேவையேற்படும்போது இதிலிருந்து இரசாயன செயல்முறைகள் மூலம் சக்தி பிறப்பிக்கப்படும்.

★ விற்றமின் D தொகுப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.நெய்ச் சுரப்பியில் உள்ள 7 Dehydro cholestrol எனும் பதார்த்தம் சூரிய ஒளியின் புற ஊதாக் கதிர் முன்னிலையில் விற்றமின் Dயினைத் தோற்றுவிக்கும். எனவே தான் காலை நேர வெய்யில் உடலில் படுதல் நல்லது எனக் கூறுகின்றனர்.

★ உடலின் வெப்பநிலை சீராக்குதலில் பிரதான பங்கு வகிக்கிறது. இதனால் சூழலில் வெப்பநிலை மாற்றம் ஏற்படினும் மனித உடல் வெப்பநிலை சீரான மாறாப் பெறுமானத்தில் வைத்திருக்கப்படுகின்றது. இது உடற்கலங்களில் உயிர் இரசாயனத் தாக்கங்கள் சரியாக நிகழ அவசியமாகும்.

★ தோலில் உள்ள வாங்கிகள் சூழலின் மாற்றங்களை உணர்ந்து மூளைக்கு நரம்புக் கணத்தாக்கங்களாக செய்தி அனுப்புகின்றது. மூளை இதனை பகுத்துணர்வதன் மூலம் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மனிதன் தன்னை தயார்படுத்திக்கொள்ள முடிகின்றது.

தோலில் பாதிப்புக்கள் ஏற்படும்போது அதன் தொழிற்பாடுகள் பாதிக்கப்படுவதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்:-

★ உடலினுள் நோயாக்கிகள் இலகுவாக நுழைந்து நோயை உருவாக்குதல்

★ உடலிலிருந்து நீரிழப்பினால் உடலின் நீர் கன அளவு குறையும். இதனால் ஈற்றில் உடற் கலங்களின் நீர் இழப்பு ஏற்பட மரணம் சம்பவிக்கும். மேற்குறிப்பிட்ட இரு காரணங்களினாலுமே பொதுவாக எரிகாயம் ஏற்பட்டோரில் மரணம் சம்பவிக்கின்றது.

★ இவ்வைதவிர பெரும்பாலான தோல் நோய்களால் ஒருவர் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கிறார். அவற்றுள் சில,

★ பொதுவான பல தோல் நோய்கள் எரிவு கடி போன்ற அறிகுறிகளை உடையது. எனவே இது ஒருவரின் வேலைத்திறனைக் குறைப்பதுடன், நித்திரையின்மை மன அமைதியின்மை போன்றவற்றினையும் ஏற்படுத்தும்.

★ சில தோல் நோய்கள் அவலட்சணமான தோற்றத்தினைக் கொடுப்பதால் ஒருவர் தானாகவே சமுதாயத்தில் இருந்து ஒதுங்கிக்கொள்கின்றார். அல்லது மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்படுகின்றார். இங்கு கவனிக்கத்தகக விடயம் யாதெனில் 'இவ்வாறு அவலட்சண தோற்றத்தைக் கொடுக்கும் Psoriasis (சொறியசிஸ்) போன்ற நோய்கள் ஒருவரில் இருந்து மற்றவருக்குத் தொற்றாது. எனவே நாம் அவர்ளை ஒதுக்கி வைக்காது சமுதாயத்தில் உரிய இடம் அளிக்க வேண்டும். இதனால் அவர்களின் மன உறுதி அதிகரித்து சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ நாம் இடமளித்தவர்களாவோம்.

★ கைகள் போன்ற இடங்களில் ஏற்படும் தோல் நோய்கள் ஒருவரின் நாளாந்த வாழ்வை பாதிப்பதுடன் அவர் தொழில் புரிவதற்கும் பெரும் தடையாக உள்ளது.

எனவே நாம் தோல் நோய்கள் பற்றி ஆரம்ப அறிவினைக் கொண்டிருப்பதன் மூலம் அவை ஏற்படும்போது ஆரம்பத்திலே கண்டறிந்து தகுந்த வைத்திய உதவியினை பெறுவதன் மூலம் நோயினை முற்றாக குணமாக்கலாம். சில தோல்·நோய்கள் ஆரம்பத்திலே கண்டறிந்து குணமாக்கினால் அவற்றினால் ஏற்படும் பல பின்விளைவுகளை தடுத்துநிறுத்த முடியும்.

மேலும் ஏனைய நோய்களுடன் ஒப்பிடும் போது தோல்நோய்கள் அதிகமாக ஏற்படுவதும் சிலர் அவற்றை அலட்சியமாக விடுவதால் பல பின்விளைவுகளை அவர்கள் எதிர்நோக்குவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தோல்நோய்கள் பற்றி விரிவான தகவல்கள் அடுத்து வருகின்றன.

### முகப்பரு (Acne)


அநேகமாக பருவ வயதில் எல்லோரையும் தாக்குகின்ற ஒரு தோல் நோயே முகப்பரு ஆகும். இதன் தாக்கம் சிலரில் குறைவாக ஓரிரு பருக்களை மட்டும் கொண்டதாக அமையனாம். வேறு சிலரில் மிக அதிகமாக பருக்கள் காணப்படுவதுடன் அவற்றுள் சில தொற்றுக்குள்ளாகியும் காணப்படலாம். இதனால் இவர்கள் மனவிரக்தி அடையவும் நேரிடுகின்றது. முகப்பரு என்பது பெரும்பாலும் பருவ வயதில் எல்லோருக்குமே வரக்கூடிய ஒன்று என்பதனையும் அதனை தகுந்த முறையில் பராமரிப்பதன் மூலம் முகத்தின் அழகு குன்றுவதனை தடுக்கலாம் என்பதனையும் பருவ வேண்டும்.

**சண்முகசுந்தரம் கஜேந்திரன்**
4ஆம் வருட மருத்துவ மாணவன்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பொதுவாக முகப்பரு குறித்த வயது (13-25) வரை மட்டுமே காணப்படும். இதற்குக் காரணம் அன்ரயின் (Androgen) வகை ஓமோன்களின் தூண்டுதலாகும். இவ்வயதின் பின்னர் தானாகவே குணமடைந்துவிடும். எனினும் முகப்பரு உள்ளபோது சரியான பராமரிப்பு முறைகளை ஒருவர் மேற்கொள்ளவில்லை எனில் இவற்றின் இறுதி விளைவாக முகத்தில் வடுக்கள் தோன்றலாம். இவ்வடுக்கள் நிரந்தரமானவை. அவை மறைவதில்லை. இதனால் முகத்தின் அழகு குன்றுகின்றது. மேலும் இவ்வடுக்களை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை, Dern aberasion போன்ற முறைகளால் மட்டுமே மறைக்கமுடியும். நமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் தற்போதுவரை இவ் நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லை. வெளி இடங்களில் செய்வதாயின் மிகுந்த செலவு ஏற்படும். எனவே முகப்பருக்களை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் இவ்வாறான பாரிய விளைவுகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

### முகப்பரு தோன்றுவதற்கான காரணம்

தோலில் அமைந்துள்ள நெய்ச்சுரப்பியின் தொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றங்களே முகப்பருவின் தோற்றத்துக்குக் காரணமாக அமைகின்றன. பருவவயதில் அன்ரஜன் (androgen) வகை ஓமோன்கள் சுரத்தல் அதிகமாகக் காணப்படும். இதன் காரணமாக நெய்ச்சுரப்பி தூண்டப்படுகின்றது. இதனால் சுரப்பி அதிக நெய்யினை (Sebum) சுரப்பதுடன் பருமனலும் அதிகரிக்கின்றது. வழமையாக இச்சுரப்பு ஆனது நெய்ச்சுரப்பி இணைந்துள்ள மயிர்கலனில் பாதையூடாக வெளியேறி தோலின் மேற்பரப்பை வந்தடையும். இதனால் தோல் வளவளப்பாக (Oily) பேணப்படும். பருவ வயதினில் சுரப்பு வெளியேறும் பாதை கெரற்றின் படிவடைவதால் ஒடுக்கமடைந்து காணப்படும். அதேசமயம் இவ்வாறான சில ஒடுக்கமான பாதைகள் இறந்த கலங்கள் போன்றவற்றால் முற்றாகத் தடைப்படும். இதனால் நெய்ச்சுரப்பு வெளியேற முடியாத நிலை தோன்றும்.



முகப்பருவினால் முதுகில் அதிகளவில் பாதிப்படைந்த ஒருவரைப் படத்தில் காண்கிறீர்கள்.

எனவே நெய்ச்சுரப்பு வெடித்து சுரப்பு உட்தோலில் ால இடைவெளிகளிலும் வெளிவிடப்படுகின்றது. இதன் விளைவாக அழற்சிக்குரிய தாக்கங்கள் (Inflammatory reaction) தூண்டப்படும். இதனாலேயே முகப்பரு தோன்றுகின்றது.

முகப்பருவானது (acne) முகம் தவிர நெஞ்சு, முதுகுப்புறம், மேற்புரகை, கழுத்து போன்ற இடங்களிலும் ஏற்படலாம். அத்துடன் இதுவரையில் குறிப்பிடப்பட்ட சாதாரணமாக அனைவரும் கருதும் முகப்பரு தவிர்ந்த ஏனைய வேறு சிலவகை முகப்பருக்களும் உள்ளன. அவை வருமாறு:-

★ Acne Cosmatica: இது பொதுவாக வயதுவந்தவரில் (25 வயதிற்கு மேல்) அளவுக்கு அதிகமான அழகுசாதன பொருள்களை உபயோகிப்பதால் ஏற்படும் முகப்பரு வகையாகும்.

★ Infsntile acne: குழந்தைகளில் தாயின் அன்ரஜன் வகை ஓமோன்களின் தாக்கத்தால் உருவாகின்றது. இது படிப்படியாகக் குறைவடைந்துவிடும்.

★ Steroid Acne: 'ஸ்ட்ரொயிட்' வகை மருந்துப் பாவனை, **Cushing syndrome** போன்றவற்றினால் ஏற்படும் முகப்பரு. இது பொதுவாக முகத்திலும் பார்க்க முதுகுப்புறத்திலே அதிகளவு ஏற்படும்.

★ Oil Acne: எண்ணெய் பொருள்களுடன் நீண்டநேர தொடுகையில் உள்ளவர்களுக்கு ஏற்படும் முகப்பரு வகையாகும்

★ Ance fulminans: இது அரிதாகவே ஏற்படுகின்றது. எனினும் இதன் தாக்கம் அதிகம். இங்கு முகப்பரு சிதற்பிடித்து காணப்படுவதுடன் ,காய்ச்சல், சோர்வு, பசியின்மை போன்றவையும் காணப்படும். இதற்கு உடனடி வைத்திய சிகிச்சை அவசியம்.

*(வளரும்)*




# அச்சுறுத்தும் டெங்கு....!

இன்று இலங்கையை கிலிகொள்ள வைத்திருக்கின்ற விடயங்களில் ஒன்று இந்த டெங்கு நோயாகும். இது நாட்டின் பல பகுதிகளில் பரவி வருவதுடன் நாட்டின் உள்வலயப் பகுதிகளில் மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்நோயினால் பலர் பலியாகியுள்ளதோடு, பலர் பாதிக்கப்பட்டும் வருகின்றனர். அத்துடன் பலர் பாதிக்கப்பட இருக்கின்றனர். எனவே இந்நோயினை பற்றிய அறிமுகம் அவசியமாகின்றது.

டெங்கு என்ற சொல் ஓர் ஆபிரிக்க சொல்லாகும். இதனைத் தமிழில் மொழிபெயர்க்கும் பொழுது 'எலும்பு முறிவு' என மொழிபெயர்க்கப்படும். இந்நோய், ஆரம்பத்தில் ஆபிரிக்காவிலேயே 18ஆம் நூற்றாண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் குரங்கினத்திலேயே காணப்பட்டுள்ளது. அதிலிருந்தே மனிதனுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் ஊர்ஜிதப்படுத்தினார்கள். இவ்வாறு ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட இந்நோய் இன்று உலகில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளான சீனா, கம்போடியா, தாய்லாந்து, பர்மா, இந்தியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், நேபாளம், தாய்வான் எனப் பல நாடுகளில் காணப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் உதாரணமாக கொழும்பு, கண்டி, கம்பஹா, குருநாகல், அனுராதபுரம் போன்ற பிரதேசங்களில் இன்றும் அதிகளவு காணப்படுகிறது.

இந்நோயானது Ades என்ற சாதி நுளம்பு இனங்களினாலே பரவுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்நோயைப் பரப்புகின்ற இரண்டு நுளம்பு இனங்கள் இனங் காணப்பட்டுள்ளன. அவையாவன:-

எயிடிஸ் இஜிப்டை (Aedes aegupti)

எயிடிஸ் அல்போ பிக்டஸ் (Aedes alho - pictus)

இவ்வகையான நுளம்பு இனங்கள் வீட்டுப்புறச் சுற்றாடலில் உள்ள இடங்களிலேயே தனது இனத்தை உற்பத்தி செய்யும் வல்லமை பெற்றுள்ளது. குறைந்தது சொட்டு தண்ணீர் இதற்குப் போதுமானது. இவ்வகையான நுளம்பு இனங்களில் பெண் நுளம்பு இனங்களே தனது இனப்பெருக்கத்துக்காக மனிதனின் குருதியை உறிஞ்சிக் குடிக்கின்றன. இவை பகல் நேரங்களிலே மனிதனைக் கடிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

டெங்கு நோயாளர் ஒருவரிடமிருந்து நுளம்பு இரத்தத்தை உறிஞ்சிய பின் சில நாள்களுக்குப் பின் (ஏறத்தாள 5 நாள்கள் ) இன்னொரு நபரைக் கடிக்கும்போது இந்நோய்க்காரணி மற்றவரின் உடம்பினுள் செல்கின்றது. தொற்று ஏற்பட்ட நுளம்பு 8-12 நாள்களுக்கு இந்நோயைப் பரப்பும் ஆற்றலுடையது. அல்லது வாழ்நாள் முழுவதும் பரப்பும் ஆற்றல் உடையது.

ஒரு மனிதனின் உடம்பினுள் நோய்க்காரணி சென்று 3-14 நாள்களுக்குள் இந்நோய்க்கான குணங்குறிகளை வெளிப்படுத்தும். இதனையே நோயரும்பு காலம் எனலாம. பொதுவாக 1-10 நாள்கள் நோயரும்பு காலமாகக் குறிப்பிடலாம்.

### நோயினால் பாதிப்படையக்கூடியவர்கள்

எல்லா வயதினரையும் தாக்கும் நோயாக இருப்பினும் பெரும்பாலும் சிறுவர்களே அதிகளவில் இந்நோய்க்கு உள்ளாக்கப்படுகின்றனர். இருப்பினும் முதலாம் முறை இந்நோயினால் பாதிப்படைந்தவர்களுக்கு இயற்கையிலே அதற்கான எதிர்ப்பு சக்தி உடம்பினுள் வலுப்பெற்றுவிடும்.

ஆனால், இரண்டாவது முறையாக ஏற்படின் அவருக்கு அதற்கான எதிர்ப்பு சக்தியை உருவாக்கமுடிவதில்லை. எனவே, இவ்வாறான நிலையில் பாரதூரமான விளைவைச் சந்திக்க நேரிடுகிறது.

### நோய் நிலைகள்

இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம்

1) டெங்குக் காய்ச்சல் (Dengu Fever)

02) டெங்கு ஹிமரோஜிக்(Dengu Hamerogic Fever)

3) டெங்கு சொக்/சின்ரொம்(Dengu sock/ Syndrome)

### டெங்குக் காய்ச்சல்

இந்நோயின் சாதாரண அடையாளங்கள்

★ கடும் காய்ச்சல்

★ தலைவலி

★ வாந்தி

★ உடல் வலி, எலும்பு மூட்டுக்களில் வலித்தல்

★ வயிற்றுழைச்சல்

மூன்று தினங்களில் இந்நோயின் அடையாளங்கள் குறைந்து நோய் குணமாகும். எனினும் சிலருக்கு டெங்கு நோயின் பின் விளைவுகள் தோன்ற இடமுண்டு.

### டெங்கு கிமரோஜிக்

★ தோலின் அடியில் சிறிய இரத்த (சிகப்பு) அடையாளம்

★ கண்கள் சிகப்பு நிறமாதல்

★ மூக்கினால் இரத்தம் வடிதல்

★ மலசலத்தினூடாக இரத்தம் வெளியாதல்

★ முரசினால் இரத்தம் வெளியாதல்

★ வாந்தி மலம், கறுப்பு அல்லது செம்பட்டை நிறமாதல்

இக்குணங்குறிகளின் அடுத்த நிலையிலே இந்நோயின் இறுதி நிலையாகும்.

### டெங்கு சொக்/சின்ரொம்

★ உடம்பு குளிராதல்

★ உடம்பு வெளிறல்

★ குழப்பமான, தூக்கமான நிலை

★ நாடி ஓட்டம் வேகமாதல்

★ மூச்சு திணறல் ஏற்பட்டு இறக்க நேரிடும்.

### கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம்/தவிர்க்கவேண்டிய விடயம்

டெங்கு நோய் என சந்தேகமிருப்பின் அஸ்பரின் அல்லது டிஸ்பிரின் கலக்கப்பட்ட மருந்துகள் அல்லது கோடீஸ் மாத்திரைகளைக் கொடுக்கவேண்டாம்.

### தடுப்பு நடவடிக்கைகள்

இந்நோயைப் பொறுத்தவரையில் சரியான சிகிச்சை முறை இல்லை. அத்துடன் சிகிச்சையளிப்பதில் ஏராளமான பணச் செலவு என்பதால் தடுப்பு நடவடிக்கை அத்தியாவசியமாகின்றது. இதில் இவ்வகையான நுளம்பு இனங்கள் உற்பத்தியாவதைத் தடுத்தல் அவசியமாகும்.

01) வீட்டின் சுற்றுப்புறத்தை துப்புரவாக வைத்துக்கொள்ளுங்கள்

02) குப்பை கூழங்களை எரித்துவிடுங்கள்

03) குரும்பை, கோம்பைக்குள் தண்ணீர் தேங்காமல் வெட்டிவிடுங்கள்

**கே.ஜெய்கணேஷ்**
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்,
அனலைதீவு.

04) வெற்றுத் தகர டப்பா, சிரட்டைகள், சடடிபானை துண்டுகள், வெற்று தயிர் சட்டிகள் என்பவற்றை உடைத்துவிடுங்கள்

05) பூச்சாடிகளில் உப்புக் கட்டிகள் கொஞ்சம் இடுங்கள் அல்லது தண்ணீரை எப்போதும் மாற்றிவிடுங்கள்.

6) கூரைகளில் தகரப் பீலிக்குள் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு அதற்குள்ளிருக்கும் குப்பை கூழங்களை அகற்றிவிடுங்கள்

07) பகல் நேரங்களில் நித்திரை செய்யும் நேரங்களில் கூட நுளம்புவலை பாவிக்கவும்.

டெங்குக் காய்ச்சல் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் உடனே அருகிலுள்ள வைத்தியசாலையில் அல்லது அப்பகுதி பொது சுகாதார பரிசோதகரிடம் ஆலோசனை பெறவும்.

பொதுமக்கள் முயற்சித்தால் டெங்கு நோயைத் தடுக்கலாம். ★

அகவை அறுபதின் நிறைவில்.......

# நன்றியுடன்



திருக்குடும்ப கன்னியர் சபைத்துறவியாய் திருக்குடும்ப கன்னியர்மட ஆசிரியராய், உப அதிபராய், அதிபராய் முப்பது வருடங்கள் பணியாற்றி ஓய்வுபெறும்

அருட்சகோ.

**யோலண்ட் மத்தியாஸ்**

யாழ்ப்பாணக் கல்விப்புலத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. எம் கல்விக்கூடத்தின் கலங்கரை விளக்காய், தாயாய், தந்தையாய், துணையாய், தலைவியாய் நின்றவரை நன்றியுடன் நினைத்து நிற்கின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
ஆங்கில பாடசாலை.

(35784) (34-16-14-26)

# தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முன்னாள் மிருதங்க விரிவுரையாளரும் இலங்கையில் பல காலம் வாழ்ந்து மிருதங்கக் கலையில் அளப்பரிய சேவையாற்றி பல சிறந்த மாணவர்களை உருவாக்கி உலக நாடுகள் வியக்கும் வண்ணம் பெருமையடையச் செய்த

**உயர்திரு. A.S. இராமநாதன்** அவர்களும்

அவரது புத்திரர் சங்கீதபூஷணம் **R.யோகராஜன**

அவர்களும் தாயகம் சென்று 20 வருடங்களின்பின் யாழ்ப்பாணம் வருகை தருகின்றார்கள். அவர்களைக் கௌரவிக்கும் வைபவம் 02-09-2004 அன்று இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் நடைபெறவுள்ளது. இவர்களைக் கௌரவிக்க விரும்பும் மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் 375, நாவலர் வீதி எனது இல்லத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S.மகேந்திரன்,
மிருதங்க விரிவுரையாளர்.
T.P.: 077 6047770

(35894) (26-14-16)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 02 - 1930



மறைவு 11 - 09 - 2003

திருமதி **ஐயம்பிள்ளை அன்னம்மா**

ஆண்டொன்று சென்றிடினும் ~ உடலால்
எமை விட்டுப் பிரிந்தாலும் ~ இப்புவியில்
நாமுள்ள வரைக்கும் உங்கள் நற்பண்புகளும்
நற் செயல்களும் ~ எம் உள்ளங்களை
விட்டகலாது
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கராச்சடி,
சண்டிலிப்பாய்.

அன்புடன் நினைவு கூரும்:
கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(35772)(34-14-16-26)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 607 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 27-08-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5866312-5881688 |

வெற்றி இலக்கங்கள்

**07 21 35 55**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை
-
இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 17,62,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,41,531 | 10/- | 34,15,310/- |
| 2.இலக்கங்கள் | 31,270 | 20/- | 6,25,400/- |
| 1.இல + லக்கினம் | 30,986 | 30/- | 9,29,580/- |
| 2.இல + லக்கினம் | 2,907 | 100/- | 2,90,700/- |
| 3.இலக்கங்கள் | 843 | 500/- | 4,21,500/- |
| 3.இல + லக்கினம் | 72 | 5,000/- | 3,60,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,07,618 | - | 75,24,990/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 75,24,990/-

தொடர் இல. 4905890 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5880767-8-89
5867906-4-98
5881398-7-41
5868231-3-52
5874471-8-78

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

## மருந்தக வசதி இன்றி மக்கள் சிரமம்

செம்பியன்பற்று,ஓக.30

வடமராட்சி கிழக்கு, முள்ளியான் கிராமத்தில் இயங்கிவந்த மத்திய மருந்தகம் புனரமைக்கப்படாததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் மேற்படி மருந்தகம் முற்றாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது. இதனால், முள்ளியான் கிராமச் சுற்றாடலில் மீளக்குடியமர்ந்த நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-36-201)

## வேலணை ஆஸ்பத்திரிக்கு மணிக்கூடு அன்பளிப்பு

குருநகர்,ஓக.30

வேலணையைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவர் வேலணை அரசினர் வைத்தியசாலைக்குச் சுவர் மணிக்கூடு ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என வேலணை அரசினர் வைத்தியசாலையின பொறுப்பு வைத்திய அதிகாரி அ.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மு.பாலச்சந்திரன் என்பவரே இம் மணிக்கூட்டை அன்பளிப்புச் செய்தவராவார்.

(எ-51)

## வீதி செப்பனிடப்பட்டது

வடமராட்சி,ஓக.30

நீண்டகாலமாகப் பழுதடைந்திருந்த மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

வதி அபிவிருத்தித் திணைக்களம் இவ்வீதியைச் செப்பனிட்டுத் திருத்தியமைத்துள்ளது. (எ-173)

## பிரதேச சபை அலுவலகத்துக்குச் சுற்றுமதில் அமைப்பு

வலி.தெற்கு,ஓக.30

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தைச் சுற்றிவரப் பாதுகாப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தால் உப அலுவலகத்தின் வடக்கு, மேற்கு, தெற்குப் புறங்களைச் சுற்றி இம்மதில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்ததங்கள் காரணமாக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த சுவர்கள் யாவும் இடிந்து அழிந்த நிலையில் காணப்பட்டன. இவற்றைப் புனரமைத்துப் புதிய மதில்கள் சுற்றிவரக் கட்டப்பட்டுள்ளன. (எ-152)

## யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

கைதடி,ஓக.30

யாழ். மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உணவு, விவசாயம், கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, பனை, தென்னை அபிவிருத்தி மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-75)

## வலி.தெற்கு நூலகங்களுக்கு நூல்கள் கொள்வனவு

வலி.தெற்கு,ஓக.30

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையினால் பிரதேச சபையின்கீழ் இயங்கிவரும் சுன்னாகம், உடுவில், ஏழாலை ஆகிய உப அலுவலக நூலகங்களுக்கென 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செயயப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் இறுதியில் இந்நூல்கள் யாவும் மலிவு விலையில் பிரதேச சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இந்நூல்கள் யாவும் விரைவில் இம்மூன்று நூல் நிலையங்களுக்கும் பங்கிட்டு வழங்கப்படவுள்ளன.

(எ-152)

# தேவை

சுன்னாகத்தில் அலுவலகப் பாவனைக்கு வீடு ஒன்று தேவை. K.K.S. வீதிக்கு அருகில் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 3072493. (35895)

20% சிறப்பு கழிவு

யாழ்ப்பாணத்தில்

# M.M.I.C

வானொலி, தொலைக்காட்சி பத்திரிகை ஊடகங்கள்சார் தபால்மூல கற்கை நெறி

**DIPLOMA IN MASSMEDIA**

பயிற்சி காலம் 6 மாதம்

கட்டணம் ~~6500~~ 5200/=

இச்சலுகை 31.08.2004 வரை மட்டும்

இக்கற்கை நெறியை மேற்கொண்டு Dip.in.m.m. (Sri Lanka) சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்.

15, சிறாம்பியடி ஒழுங்கை ஸ்ரான்லி வீதி
மணியம்ஸ் பில்டிங் யாழ்ப்பாணம். T.P 0777 316258

## நல்லூர்க் கந்தன் மஹோற்சவ கால தெய்வீகத் தொடர் இசைப்பேருரை

இடம்: நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில்

30.08.2004 திங்கள் ஆரம்பம்

**"கம்பராமாயணம்"**

கானகதாவாரிதி
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா

அணிசேர் கலைஞர்கள்:

வித்துவான் M.கண்ணன் - ஹார்மோனியம்
வித்துவான் A.ஜெயராமன - வயலின்
வித்துவான் T.ராஜன - மிருதங்கம்

தினமும் மாலை 6மணிக்கு நடைபெறும்.

நல்லூர் சைவமகாசபை.

விளம்பர அன்பளிப்பு: (35901)(35-14)

**சஞ்சீவி - சங்குசக்கரம் பெயின்ற் ஹவுஸ்,**
பரமேஸ்வராச் சந்தி - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**Dialog** GSM டயலொக

கையடக்க தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

kit

எந்நேரமும் உன்னுடன்....

**Sri Murugan**
Tele Communication
&Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna,
T.P.:021 222 5392 Fax: 222 3214.
email: del-smskr @ eureka.lk

(சி-37319) (26-14-16)

# துயர் பகிர்வு

எமது பள்ளியில் கல்விசாரா ஊழியராகப் பணியாற்றும்

மு.சந்திரலிங்கம்

அவர்களின் தாயார்

**முருகேசு மீனாட்சி**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/பெரியபுலம் ம.வி.
பள்ளிக்குழுமம்.

(35899) (26-14-16)

# இரண்டாம் வருட இதய அஞ்சலி

செல்வி

**கந்தவனம் தர்ஷிகா**

(மாணவி,
கொக்குவில் இந்துக்கல்லூரி)



சிந்தாமணி விநாயகர் அருளியது
25-03-1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது
23-08-2002

திதி: 30.08.2004

"கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய்" என்றே தான்
வரந்தந்தனுப்பினரோ?
சிந்தாமணிக் கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியான் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

"கவி போட்டோ",
நவாலி தெற்கு. (சி-37201)(34-16-14-26)

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி நாகரத்தினம்



சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 12/25, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகரத்தினம் 27-08-2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31-08-2004) செவ்வாய்க்கிழமை அவரது வதிவிடமான 12/25, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நடைபெற்று, பூதவுடல் பின்னர் மு.ப. 11.00 மணி தொடக்கம் பி.ப. 12.30 மணிவரை நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை கிழக்கு, சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின் அங்கிருந்து தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


12/25, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 222 6631 (35900) (26-16-14)

தகவல்:
E.S.கந்தசாமி
*(கணவர்).*

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

**(10 ஆம் திருவிழா) மஞ்சத் திருவிழா**



## நல்லையில் மஞ்சவிழா

இராகம்: பெஹாக் தாளம்: ஆதி

பல்லவி

மஞ்ச விழாக்காண வாரீர் - உங்கள்
நெஞ்சம் பெருகிடும் ஆனந்தம் பாரீர்
(மஞ்ச)

அனுபல்லவி

கஞ்ச மலர்ப்பதக் கந்தனை - உங்கள்
கண்கள் கண்டு களித்திட வாரீர்
(மஞ்ச)

சரணம்

தஞ்சம் அளிக்குந் தனிப்பெரு வள்ளல்
சஞ்சலம் தீர்த்திடும் சண்முக நாதன்
குஞ்சரி வள்ளி கோலனாம் கந்தன்
செஞ்சுடர் வேலொரு கையுடன் வருவான்
(மஞ்ச)

அடியார் கூட்டம் அணிஅணி பின்னே
ஆடியும் பாடியும் அரஅர என்றிட
வடிவே லோன்முன் மக்கள் நெருங்கி
வடம்பிடித் திழுத்திடும் மஞ்ச விழாவே
(மஞ்ச)

ஆரா அன்பில் அடியார் வெள்ளம்
சீரார் திருநல் லூரான் வீதி
ஓரா துணர்ந்து ஒவ்வோர் ஆண்டும்
பாராக் களித்துப் பயன்பெறும் அந்த மஞ்சம்

- பண்டிதர் சி.கா.சேந்தன்

## சண்முகனின் மஞ்சம்

கந்தனது கலைமலிந்த மஞ்சம் - நல்ல
கதைகூறும் சிலையமைந்த மஞ்சம் - அடியார்
வந்தனைசெய் வாழ்வுதரும் மஞ்சம் - அழகாம்
வனப்புடைய சிங்கார மஞ்சம்

சேவலது கொடியாடும் மஞ்சம் - உயர்ந்த
சிறந்த வெள்ளிக் குடைநிழல் சேர் மஞ்சம்
பாவலர்கள் பாடி வரும் மஞ்சம் - ஐயன்
பன்னிருகை வேலன் வரும் - மஞ்சம்

பத்து பத்து லட்சம் மக்கள் போற்றும் - அந்த
பழனிமலை நிகரான மஞ்சம் - அருள்
சித்தர்களும் பக்தர்களும் போற்றும் - நல்லூர்
சிறப்புடைய சண்முகனின் மஞ்சம்

சிறுவருடன் பெரியவர்கள் ஒன்றாய் - வலமாய்
சேர்ந்து வடம் பிடித்திழுக்கும் மஞ்சம்
குறுமுனிவர் முதியவர்கள் சூழ்ந்து - அன்பால்
கூத்தாடும் குருபரனின் மஞ்சம்

ஆறுமுகா வேலா கார்த்திகேயா - முருகா
அப்பனே நல்லூரா என்று - மக்கள்
பாடியாடி நோற்றுப் போற்றும் மஞ்சம் - அந்த
பார்வதியின் பாலனது மஞ்சம்

கண்ணூறு நரவூறு படாதே - அவனைக்
காத்திருந்து நோற்றிருந்து பாடும்
தொண்ணூறு வயதுப் புல வர்களும் - நன்கு
துதிக்குங் குகன் மஞ்சம் என்றும் வாழி

முதுபெரும்புலவர், கலாபூஷணம்
வை.க.சிற்றம்பலம

## கொடும் பிறவி அறும்

கண்ணானைக் கண்ணிலுள்ளே ஒளியானானை
கார்த்திகைப்பெண் கரமெடுத்த குழவிதன்னை
பண்ணானைப் பழங்கேட்டுப் பழமானானை
பராபரமாய் நிராமயமாய் நின்றான் தன்னை
எந்நாளும் தேவர்கட்கும் ஈடில்லானை
இந்திரனும் பணிந்தேத்தும் பெருமான்தன்னை
பொன்னான மஞ்சமதில் இவருவானை
பணிந்தவர்கள் கொடும்பிறவி யகலுங்காணே!

கவிமணி கந்த.முருகேசதாசனார்

## மஞ்சத்தில் வருக!

நெஞ்சத் தடத்தில் உனைநினைந்து
நித்தம் நித்தம் நெக்குருகி
கெஞ்சித் துதித்து அடிதொழுவார்
கேடு அகல என் செய்தாய்?
அஞ்சித் துவளும் துயரகல
அருளைச் சுரந்து மஞ்சத்தில்
விஞ்சி நிற்கும் வேதனையை
விரட்ட வருவாய் நல்லூரா!

முருகனடியான்.

# உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எழுத்தாக்கப் போட்டிகள் நடத்தப்படும்

தென்மராட்சி,ஓக.30

உலக ஆசிரியர் தினத்தையொட்டி விளக்கு சஞ்சிகை நிறுவனத்தினர் சுவாமி விபுலானந்தர் நினைவாக எழுத்தாக்கப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் கட்டுரை, கவிதை, சிறுகதை, விமர்சனக் கட்டுரை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

சுவாமி விபுலானந்தரின் கல்வி அறிவு என்னும் தலைமையிலான கட்டுரையும் தமிழீழ கல்விப்புல சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் கருத்துச் செறிவுள்ள விடயங்களை உள்ளடக்கிய சிறுகதைகளும், தமிழீழ கல்விப் புலம் பற்றிய மரபுப் புதுக்கவிதைகளும், விளக்கு சஞ்சிகை பற்றிய விமர்சனக் கட்டுரையும் ஆக்கப்படல்வேண்டும்.

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் தமது ஆக்கங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை, கல்விவலய அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

கட்டுரை, சிறுகதை ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா, 7500ரூபா, 5ஆயிரம் ரூபாவும் -

கவிதை, விமர்சனக்கட்டுரை ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா, 2ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# சம்பளப் பட்டியல்களை கணனியில் வடிவமைக்கக் கோரிச் சுற்றறிக்கை

## மாகாண செயலகம் அனுப்பி வைத்தது

குருநகர்,ஓக.30

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் அரச திணைக்களங்கள் யாவும் தமது மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களையும், சம்பளப் பட்டியலையும் கணனி மூலம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் பணித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களக் கணக்குகள் யாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் கணனி மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கென அரச திணைக்களங்களுக்கு கணனிகள் வழங்கப்பட்டு கணக்காளர்கள், எழுதுநர்கள், கணக்குப் பதியுநர்களுக்குப் போதிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஆனால், இப்பயிற்சிகள் வழங்கப்பட்டபோதிலும் இன்னும் சில திணைக்களங்களில் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

எனவே, நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் மேற்கூறிய கணக்கு அறிக்கைகள் கணனிமூலம் தயார் செய்யப் படவேண்டும்.

- இவ்வாறு கணனி மயப்படுத்தாத திணைக்களங்கள் குறித்து மாகாணப் பிரதம செயலாளருக்கும், மாகாண ஆளுநருக்கும் அறிக்கை வழங்கப்படும் எனவும் - இந்தச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-51)

## நெற்செய்கை குறித்து கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,ஓக.30

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நடத்தும் 2004/2005 ஆம் ஆண்டிற்கான காலபோக நெற்செய்கை பற்றிய கலந்துரையாடல் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சம்மேளன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.க.முதலியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கீரிமலை கமநலசேவை கேந்திர நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்ணன், உடுவில் கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இதில் கலந்துகொள்வார்கள்.

காலபோக நெல்விதைப்பு ஆரம்பிக்கப்படும் திகதி, பொருத்தமான நல்ல இன விதைநெல் பெறுவது ஆகிய பல்வேறு விடயங்கள் இக் கலந்துரையாடல் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என்று சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

வலி.தென்மேற்கு,ஓக.30

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் (ஜே.146) பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரண பங்கீட்டு அட்டைகள் இன்று திங்கட்கிழமையன்றும், நாளை செவ்வாய்க் கிழமையன்றும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் குடும்பத்தின் தலைவர் தமது தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றை நேரில வந்து சமர்ப்பித்து மீள்ாய்வு செய்துகொள்ள முடியும் என்று பண்டத்தரிப்பு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானானந்தன் தெரிவித்துள்ளார். (எ-135)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு எஸ்.குமாரசாமியின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கெஞ்சிரா கே.அனந்தகோபன், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்பர்.(எ-13)

◆ ◆ ◆

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்துகலாசாரத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் 7 மணிக்கு நடத்திவரும் உற்சவகால நிகழ்வுகளில் இன்று திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி சங்கீத ஆசிரியர் திருமதி நந்தினி தேவி உதயகுமாரின் சங்கீதக் கச்சேரி இடம் பெறும். (எ-13)

◆ ◆ ◆

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி நல்லூர் மேற்குவீதி ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் இன்று முதல் தினமும் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மாவின் 'ஸ்ரீ இராமவதாரம்' பொருள்பற்றி தொடர் இசைப் பேருரை இடம் பெறும். (எ-13)

## காலபோக நெற்செய்கையாளருக்கு கடன் வழங்க பண்டத்தரிப்பில் ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஓக 30

பண்டத்தரிப்பு பல நோ.கூட்டுறவுச் சங்கம் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு நெற்செய்கைக் கடனுதவி வழங்கவுள்ளது.

இதற்கான தீர்மானம் அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் பணிப்பாளர்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கடனைப்பெற விரும்பும் சங்க உறுப்பினர்கள் தத்தமது பிரிவுக் கிளைகளில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று கிளைகுழுவின் சிபார்சுடன் தலைமை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும்

- இவ்வாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதர் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

தலா 10 ஆயிரம் ரூபா வீதம் விவசாயிகளுக்கு இக் கடன் வழங்கப்படும் என்றும் -

நெல் அறுவடை முடிந்தவுடன் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில்
பத்தாம் திருவிழா - மஞ்சம்
கைலாசவாகனக் காட்சி காலை 10.30 மணிக்கு
அழகிய மஞ்சம் - பவனி மாலை 5.30 மணிக்கு
முத்துக்குமரசாமி - வள்ளிதேவயானை வீதிவலம்
மஞ்சத்தில் வரும் முருகனே! தஞ்சமென்று வந்தோம்!!
அஞ்சேலென அபயகரமளிப்பாய்! பஞ்சமது தீர்த்திடுவாய்!!





HERO HONDA World No.1
RG
இரத்தினகோபால்ஸ்
65,63 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
☎:0777 - 340056, 021 -222-6185
TVS Lanka Private Ltd.
இன் அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ்.முகவர்
TVS (C/3723)

## வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம்: சங்கராபரணம் தாளம்: ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே!

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார்
வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம்



- யோகர்சுவாமிகள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

புத்தம் புதிய செற்றிகள் (சோபா செற்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (35785)

மூன்று மாதங்கள் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சல் - ஜேர்மன் ஷெப்பேர்ட் அல் சேஷன் குறொஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக் குணடு. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை, (இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பின் ஒழுங்கை) கொக்குவில் கிழக்கு, கொக்குவில். புதியநேரம் மாலை 5.30 முதல் 6.30 மணி வரை பார்வையிடலாம் (35668)

ELF இசுசு 250 இற்கு உரிய அலுமினி யத்திலான முழுபொடி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 0777-917794, 021-222-3049, 021-222-3050 (C/37280)

## வான் விற்பனைக்கு

E.L.F-350 ரக வான் இரண்டு புத்தகங்க ளுடன் முழுக் கூடாரத்துடன் உடன் விற்ப னைக்குண்டு. தொடர்பு:க. சாந்தகுமாரன் (சாந் தன்), முதலாம் யூனிற்சந்தி, மல்லாவி, யோக புரம். (35884)

40 SRI தொடர் இலக்கமுடைய பழைய மொடல் HIACE வான் விற்பனைக்குண்டு. விலை 3லட்சம். தொடர்பு: பழைய உதயன் பணிமனை லேன், கைலாசபிள்ளையார் கோயிலடி, 292/4, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். (35903)

## தவறிவிட்டது

யாழ்.பல்கலைக்கழக மாணவியும், 4ஆம் கண்டம், கற்சிலைமடு, ஒட்டுசுட்டானைச் சேர்ந் தவருமான கார்த்திகேசு சுதாஜினி என்பவரு டைய தேசிய அ.அட்டை (இல.805312416V) நிரந்தரப் பயண அட்டையும் 26.08.2004 வியா ழக்கிழமை A9 பாதையில் முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் பயணத்தின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் ஒப் படைத்துதவவும். (35888)

## வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பஸ்நிலையம், ஆஸ் பத்திரி வீதி, கே.கே.எஸ்.வீதிப் பகுதிகளில் கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி மற்றும் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை. உடன் தொடர்புகளுக்கு: கியூ.T.P: 077 6048665, 077 6162314, 077 6511964 (35909)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலை ரூபா35, பேட்டுக்குஞ்சுகள் விலை ரூபா 50. 30.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டிப் பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும், முருகன் சாவகச்சேரி, சூட்டிபாம் வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (35466)

35 நாள்களில் 2Kg இற்கு மேல் வளர்ச்சி யடையக் கூடிய நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 1.9.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.3529, 2867, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக. (35898)

**யாழ்.மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கம்**
**அவசர பொதுக்கூட்டம்**

*காலம்:* 31.08.2004 செவ்வாய்க்கிழமை
*நேரம்:* 10.30 (புதியநேரம்)
*இடம்:* புதிய உயர்கல்லூரி
*விடயம்:* வழங்கப்படவிருக்கும் நியமனம் தொடர்பான கலந்துரையாடல் (பட்டியலில் பெயர் வந்த, வராத அனைவரும் சமுகந்தரவும்)

**செயலாளர்.** (35906)(42-16) **தலைவர்.**

## முதலாவது 30-08-2004 பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இத்தாவில், பளையைச் சேர்ந்த
**திருக்குமரன் - ஸ்ரீமதி** தம்பதிகளின்
செல்வப் புதல்வன் **சதுர்ஜன்** தனது
முதலாவது பிறந்ததினத்தை
இன்று (30.08.2004)
திங்கட்கிழமை தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா,
அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார்,
மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார்,
உறவினர்அனைவரும் பல்கலையும்
பெற்று பல்லாண்டு காலம்
வாழ்க என வாழ்த்துகின்றனர்.

**சதுர்ஜன்**

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (35904)

தகவல்: சு.திருக்குமரன்,
துர்க்கா பாதணிகளும் அழகுமாடமும்,
72, பலாலி வீதி, திருநெல்வேலி.

## விபத்தில் மூவர் படுகாயம்

தென்மராட்சி,ஓக.30

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பாலத்தில் போடப்பட் டிருந்த தண்டவாளத் தில் ஏறியதாகக் கூறப்படும் சம்பவத்தில் சைக்கிளில் வந்த மூவர் காயமடைந்தனர்.

கடந்தவியாழனிரவு 10 மணியளவில் புத் தூர் மட்டுவில் வீதி யில் உள்ள வண் ணாததிப் பாலத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. சுன்னாகம் உடுவிலைச் சேர்ந்த தம்பிராசா சுதர்சன் (வயது-29), யோகேஸ வரன் (22) ஆகியோரே இதில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத் திரியில் அனுமதிக் கப்பட்டு பின்னர் மேல திக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத் தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர். (எ-31-117)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி சரஸ்வதி



பருத்தித்துறை, புலோலியைப் பிறப்பிடமாக வும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சரஸ்வதி நேற்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி யளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் மீனா, சபேசன், பகீரதன் ஆகியோரின் அனபுத் தாயாரும் சிவபாதத்தின் மாமியாரும் தர் சாந்தன், தர்சிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் அச்சுவேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி* (35905)(40-16-42)

தகவல்:
பகீரதன் (மகன்)


## இணையத் தளம் ஊடாக
## 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம்
மூலம் செவிமடுத்து மகிழலாம்)

**உலகத் தமிழர் வானொலியுடன்**

நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969

**உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாக**
**உலகத் தமிழர் வானொலி**

ஊடக அனுசரணை:- 'உதயன்'


# 61 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

## திருமதி இராசமணி விசாகலட்சுமி



மண்ணில் **1940-10-31** விண்ணில் **2004-07-01**

நரகத்தை மண்ணிலே வாங்கினோம் - ஒரு
கலகத்தை நெஞ்சிலே தாங்கினோம்
இதயத்தை இழந்தே ஏங்கினோம் - பெருந்
துயரத்தை சுமந்தே தூங்கினோம்.

முற்பிறப்பின் புண்ணியமோ
முடிவேன் எனத் தெரிந்தும்
இப்பிறப்பில் உங்கள் பிள்ளைகளானது - தாயே!
சித்திரத்துச் சிறுமுத்தாய்
கைப்புறத்தில் எமை ஏந்தி
காலமெல்லாம் காத்த கடனை - எனி
எப்பிறப்பிலம்மா தீர்ப்போம் - இதோ
நெத்தறுந்த நெல்லானேன்.

அலைந்த எனக்கு ஆறுதலளிக்க
இப்பூமியிலெனி யாருமுண்டோ
தொலைந்த எம் ஆறடி இமயமே
புடைவைக் கடையிலும் புலம்புகிறேனம்மா
நுழைந்த வான் விட்டு
விரைந்துதான் வாருங்கள் - எம்
கலைந்த மனம் தேற்ற
கதை ஒன்றுதான் கூறுங்கள்.

எங்கள் குடும்ப ஒளிவிளக்கின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, துண்டுப் பிரசுரங்கள் மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (30.08.2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆத்ம சாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கிறோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

**மக்கள், மருமக்கள்.**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (35908)(34-42-16)

தகவல்:
R.ரவீந்திரகுமார் (ரவி) (பெஷன் சில்க், சுன்னாகம்).

# உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்

ஏதென்ஸ் 2004

கணனித்துறையில் நீங்கள்
ஓர் பட்டதாரியாக......
BTEC HND
"IIS என்றும் உங்கள் வளமான
எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831/021 222 6933

## 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அமெரிக்காவுக்கு 2 தங்கப்பதக்கங்கள்

ஒலிம்பிக் 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அமெரிக்காவுக்கு 2 தங்கப் பதக்கங்கள் கிடைத்தன. ஆண்களுக்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வில்லியம்சன், ஜெர்மிவாரியர், ஹாரிஸ், டெரிக்புரு ஆகியோரைக் கொண்ட அமெரிக்க அணி தங்கப்பதக்கம் பெற்றது. இந்த அணி பந்தயத் தூரத்தை 2 நிமிடம் 55.91 விநாடிகளில் கடந்தது. ஆஸ்திரேலியா 3 நிமிடம 00.60 விநாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கமும் நைஜீரியா 3 நிமிடம் 90 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றன.


மகளிர்க்கான 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் டிரோட்டர், ஹெண்டர்சன், ரிச்சர்ட்ஸ், ஹென்னாகான் ஆகியோரைக கொண்ட அமெரிக்க அணி தங்கப்பதக்கம் பெற்றது. இந்த அணி பந்தயத் தூரத்தை 3 நிமிடம் 19.01விநாடிகளில் கடந்தது.

இதேவேளை, ஆண்களுக்கான 4x400 மீற்றர் அஞசல் ஓட்டத்தில் அமெரிக்காவுக்கு இங்கிலாந்து அதிர்ச்சி கொடுத்தது. ஜேசன், கேம்பல், டேவ்னிஷ், லீவிஸ், பிரான்ஸிஸ் ஆகியோரைக் கொண்ட இங்கிலாந்து அணி 38.07 விநாடிகளில் கடந்து தங்கப்பதக்கம் பெற்றது.

இப்போட்டியில் ரஷ்யா 3 நிமிடம் 20.16விநாடிகளில் கடந்து 2ஆவது இடத்தையும், ஜமைக்கா 3 நிமிடம் 22விநாடிகளில் கடந்து 3ஆவது இடத்தையும் பிடித்தன.

'பட்டனை' பெறுவதில் ஏற்பட்ட கால தாமதத்தால் அமெரிக்கா தங்கப்பதக்கத்தை இழந்தது. கிராபோர்ட் கேட்லீன், மில்லர், கிரீனி, ஆகியோரைக் கொண்ட அமெரிக்க அணி 38.08 விநாடிகளில் கடந்து 2ஆவது இடத்தையும் நைஜீரியா 38.23விநாடிகளில் கடந்து 3ஆவது இடத்தையும் பிடித்தன. (எ)

Castrol உங்கள் நெஞ்சைத் தொடும் யமஹா
Engine Oil From U.K
ஸ்பாக் பிளக்
From Japan
YAMAHA
Castrol YAMAHA racing
298 KKS Road, Jaffna.



உக்ரைன் வீரர்கள் இருவர் ஒருவருக்கு ஊடாக மற்றவர் சுழியோடும் போட்டியில் பங்குபற்றும் காட்சி

## 56ஆண்டுகளுக்குப் பின்னர் எகிப்துக்குத் தங்கப் பதக்கம்

எதென்ஸ்,ஓக.30

ஒலிம்பிக்கில் 56 ஆண்டுகளுக்குப் பின்னர் எகிப்து தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளது. அந்நாட்டின் மல்யுத்தவீரர் கராம் இப்ராஹிம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 96கிலோ எடைப்பிரிவுக்கான போட்டியில முதலிடம் பெற்றதன் மூலம் எகிப்துக்கு இப்பெருமை கிடைத்துள்ளது.

கிரெகோ ரோமன் போட்டியில் பங்கேற்ற இப்ராஹிம் 12-1 என்ற புள்ளிக் கணக்கில் ஜார்ச்சியா வீரர் ரமாஸ் நோஸாட்ஸே-வை எளிதில் வென்றார்.

கடைசியாக 1948 லண்டன் போட்டியில் எகிப்து 2தங்கப்பதக்கங்களை வென்றது. அதன் பிறகு தற்போது எதென்ஸில் தங்கத்தைப் பெற்றுள்ளது. (எ)

## பதக்கப் பட்டியல்
(நேற்று முற்பகல் நிலைவரம்)

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | அமெரிக்கா | 34 | 38 | 28 | 100 |
| 02. | சீனா | 31 | 17 | 14 | 62 |
| 03. | ரஷ்யா | 23 | 26 | 36 | 85 |
| 04. | ஆஸ்திரேலியா | 17 | 16 | 16 | 49 |
| 05. | ஜப்பான் | 15 | 10 | 11 | 36 |
| 06. | ஜேர்மனி | 14 | 15 | 18 | 47 |
| 07. | பிரான்ஸ் | 11 | 08 | 12 | 31 |
| 08. | இத்தாலி | 09 | 10 | 11 | 30 |
| 09. | பிரிட்டன் | 09 | 08 | 12 | 29 |
| 10. | உக்ரைன் | 09 | 05 | 08 | 22 |
| 11. | தென்கொரியா | 08 | 11 | 09 | 28 |
| 12. | ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| 13. | றொமேனியா | 08 | 05 | 06 | 19 |
| 14. | கிரேக்கம் | 06 | 05 | 04 | 15 |
| 15. | கியூபா | 05 | 06 | 10 | 21 |
| 16. | நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| 17. | நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| 18. | சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| 19. | ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| 20. | கனடா | 03 | 06 | 03 | 12 |
| 21. | பிரேசில் | 03 | 03 | 02 | 08 |
| 22. | போலந்து | 03 | 02 | 05 | 10 |
| 23. | துருக்கி | 03 | 02 | 03 | 08 |
| 24. | நியூஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| 25. | தாய்லாந்து | 03 | 00 | 04 | 07 |
| 26. | பெலாறஸ் | 02 | 04 | 08 | 14 |
| 27. | ஒஸ்ரியா | 02 | 04 | 01 | 07 |
| 28. | எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| 29. | ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| 30. | தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| 31. | ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| 32. | பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| 33. | ஜமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| 34. | ஈரான் | 02 | 01 | 01 | 04 |
| 35. | மொராக்கோ | 02 | 01 | 00 | 03 |
| 36. | ஆஜென்ரீனா | 02 | 00 | 04 | 06 |
| 37. | உஸ்பெகிஸ்தான் | 02 | 00 | 02 | 04 |
| 38. | சிலி | 02 | 00 | 01 | 03 |
| 39. | கென்யா | 01 | 04 | 02 | 07 |
| 40. | செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| 41. | தெ. ஆபிரிக்கா | 01 | 03 | 02 | 06 |
| 42. | லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| 43. | சுவிஸ்லாந்து | 01 | 01 | 02 | 04 |
| 44. | இந்தோனேஷியா | 01 | 00 | 05 | 06 |
| 45. | சிம்பாப்பே | 01 | 01 | 01 | 03 |
| 46. | டென்மார்க் | 01 | 00 | 06 | 07 |
| 47. | அஜர்பைஜான் | 01 | 00 | 04 | 05 |
| 48. | எகிப்து | 01 | 00 | 03 | 04 |
| 49. | பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 50. | பஹமாஸ் | 01 | 00 | 01 | 02 |
| 50. | இஸ்ரேல் | 01 | 00 | 01 | 02 |
| 52. | கமரூன் | 01 | 00 | 00 | 01 |
| 52. | டொமினிக்கன்குடி. | 01 | 00 | 00 | 01 |
| 52. | அயர்லாந்து | 01 | 00 | 00 | 01 |
| 52. | ஐ. அ. இரா | 01 | 00 | 00 | 01 |
| 56. | வடகொரியா | 00 | 04 | 01 | 05 |
| 57. | லத்வியா | 00 | 04 | 00 | 04 |
| 58. | கஜகஸ்தான் | 00 | 03 | 03 | 06 |
| 59. | மெக்ஸிகோ | 00 | 03 | 01 | 04 |
| 60. | குரோசியா | 00 | 02 | 02 | 04 |
| 61. | போர்த்துக்கல் | 00 | 02 | 01 | 03 |
| 62. | பின்லாந்து | 00 | 02 | 00 | 02 |
| 63. | ஸ்லோவேனியா | 00 | 01 | 03 | 04 |
| 64. | எஸ்லோனியா | 00 | 01 | 02 | 03 |
| 65. | ஹொங்ஹொங் | 00 | 01 | 00 | 01 |
| 65. | இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 65. | பரகுவே | 00 | 01 | 00 | 01 |
| 65. | சேர்மென்ரி நிக்ரோ | 00 | 01 | 00 | 01 |
| 69. | கொலம்பியா | 00 | 00 | 02 | 02 |
| 69. | நிகரகுவா | 00 | 00 | 02 | 02 |
| 71. | எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |
| 71. | மொங்கோலியா | 00 | 00 | 01 | 01 |
| 71. | சிரியன் குடியரசு | 00 | 00 | 01 | 01 |
| 71. | டிரினிடாட் | 00 | 00 | 01 | 01 |
| 71. | வெனிசுலா | 00 | 00 | 01 | 01 |

"அழகிய ஜவுளிகளின் ஆலயம்"
சிவகணேசன்
ரெக்ஸ்ரைல்ஸ்
# 41. பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 222 2063

## ஒலிம்பிக் தடகளப் போட்டி; சீனாவிற்கு இரண்டு தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக்கில் தடகளத்தில் சீனா இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றது.

ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டும் ஓட்டதில் சீனாவின் லியுஜியாங், முன்னணி வீரர்கள் பலரையும் முந்திக்கொண்டு முதலிடத்தைப் பிடித்தார். இவர் போட்டித் தூரத்தை 12.91 விநாடிகளில் கடந்து தங்கம் கைப்பற்றினார். இதன்மூலம் 11 ஆண்டுகளுக்கு முன் பிரித்தானியாவின் கொலின்ஜான்சனின் 12.91 விநாடிகள் சாதனையை, ஜியாங் சமன் செய்தார்.

மகளிர்க்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியிலும் சீன வீராங்கனை தங்கம் வென்றார். ஜிங்ஹுய்னா, போட்டித் தூரத்தை 30 நிமிடம் 24.36 விநாடிகளில் கடந்து முதல் இடத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம், ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் தங்கம் வெல்லும் நான்காவது சீன வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார்.

வெள்ளி மற்றும் வெண்கலத்தை எத்தியோப்பியா வீராங்கனைகள் தட்டிச் சென்றனர். ஜகாயு டிபாபா 30 நிமிடம் 24.98 விநாடிகளில் கடந்து இரண்டாவது இடத்தையும், இரண்டு முறை ஒலிம்பிக் சாம்பியனான தேராரு துலா 30 நிமிடம் 26.42 விநாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தையும் வென்றனர். (எ)

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட...
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
141, Power House Road Jaffna Abans T.P- 021-222-5766

## சாகசப்போட்டிகளில்...



பிரான்ஸ் வீராங்கனை



ரஷ்ய வீராங்கனை

SONY
சீடியின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்
ஏக விநியோகஸ்தர்கள்:-
SIEDLES
No.11, Stanly Road, Jaffna
T.P: 021 222 6744

SHARP
be sharp
5 வருட
உத்தரவாதத்துடன் விற்பனைக்கு
பிந்திய சேவை
பிறவுண் அன்ட் கம்பனி
89, ஸ்ரான்லி வீதி, யாழ் 021-222 5150

எப்பிரதேசத்திலும் அன்ரனா மூலம்
இயங்கக் கூடிய மொபி ரெல் இணைப்புக்கள்
IDD இணைப்புக்கள் 23000/=
பவர் செலுலர்
ட்ரேடிங் கம்பனி
இல.185. முதலாம் மாடி. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 2227070

# செச்சினியாவில் நேற்று அதிபர் தேர்தல்; அல்கானோவின் வெற்றிவாய்ப்பு அதிகம்

மொஸ்கோ,ஓக.30

ரஷ்யாவின் ஒருபகுதியான செச்சினியாவில் புதிய அதிபருக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.காலை 8மணிமுதல் மாலை 8 மணி வரை வாக்கெடுப்பு நடவடிக்கைகள் இடம் பெற்றன.

நேற்று நடைபெற்ற அதிபர் தேர்தலில் செச்சினியாவின் உயர்பொலீஸ் அதிகாரியாக இருந்த அலு அல்கானோவ் வெற்றிபெறுவார் என்று கூறப்படுகிறது. அவரின் வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன.

ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த செச்சினிய முன்னாள் அதிபர் அஹமட் கதிரோவ் கடந்த மே மாதம் பிரிவினைவாதிகளால் குண்டு வைத்துக் கொல்லப்பட்டார். இவருடைய மரணத்தைத் தொடர்ந்து செச்சினியாவில் அதிபர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

இதனால், புதிய அதிபரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. வன்முறைகள் வெடிக்கக்கூடும் என்ற அச்சத்தில் பாதுகாப்பு மிகக் கடுமையாக பலப்படுத்தப்பட்டிருந்தது.

அதிகமான ரஷ்யப் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். செச்சினியாவில் பாதுகாப்புக் கெடுபிடிகள் நேற்று அதிகமாக இருந்தன.

அண்மையில் ரஷ்யாவில் இருவிமானங்கள் விபத்துக்குள்ளானதற்கு பிரிவினைவாதிகளே காரணம் என்று கூறப்படுகின்றது. இவர்கள் நேற்று நடைபெற்ற தேர்தலை பகிஷ்கரித்தே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

தேர்தல் முடிவுகள் இன்றைய தினத்துக்குப் பிறகே வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செச்சினியாவில் இறுதியாகப் பதவி வகித்த 5 அதிபர்களில் நால்வர் பிரிவினைவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

செச்சினிய அதிபர் பதவி ஓர் ஆபத்தான பதவியாகும் என்று அவதானிகள் வர்ணிக்கின்றனர். (க)

# பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் இருவர் ஈராக் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடிப்பு

ஈராக்கில் பிரான்ஸ் பத்திரிகையாளர் இருவரை தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர். இவர்களை விடுவிப்பது என்றால் பிரான்ஸில் உள்ள முஸ்லிம் மாணவிகள் கல்லூரிக்கு பரதா அணிந்து வர விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டுமென நிபந்தனை விதித்துள்ளனர். முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிவதைப் பிரான்ஸ் அரசு அண்மையில் தடைசெய்திருந்தது. இதற்கு பிரான்சிலும் உலக நாடுகளிலும் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன.

இந்தத் தடைச் சட்டம் தீவிரவாதிகளின் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்தே ஈராக்கில் பணியாற்றும் இரு பிரான்ஸ் ஊடகவியலாளர்களை தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து பிரான்ஸ் பிரதமர் ஜீன் பியரேரவரின் தனது உயர்மட்ட அதிகாரிகளை அழைத்து பேச்சுக்களியில் ஈடுபட்டுள்ளார். அவர் வெளிநாட்டு, உளதுறை மற்றும் தொடர்பாடல் அமைச்சர்களை தென் பிரான்ஸில் சந்திக்கச் செல்லவிருந்தார்.

ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்ட தகவல் கிடைத்ததும் தனது பயணத்தை இடைநிறுத்திவிட்டு உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

கடத்தப்பட்ட இருவரும் 'லீ பிகரோ' என்ற செய்தி நிறுவனத்தில் பணியாற்றும் கிறிஸ்டியன் செஸ்நொட் மற்றும் ஜோர்ஜஸ் மெல் போர்னட் ஆகியோராவர். (க)

# அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கொலை மிரட்டல்; பொலீஸ் அதிகாரி கைது!

மியாமி,ஓக.30

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடந்த ஜுலை மாதம் புளோரிடா மாகாணத்தில் உள்ள தாம்பா நகருக்குச் சென்று நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அந்தச் சமயத்தில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதுதொடர்பாகப் பொலீஸ் அதிகாரி ஒருவர் உளவுத் துறைக்குத் தவறான தகவல் கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து, இரகசியப் பொலீஸார் விசாரணை நடத்தி ஜோசப் ஜிஜினா மாஷாக்கு (வயது35) என்பவரைக் கைதுசெய்தனர். இவர் பயிற்சி முடித்த பொலீஸ் அதிகாரி ஆவார். தற்போது பணியிலிருந்து இவா நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ஜோசப்புக்கு 5ஆண்டுகள் சிறைத் தண்டனையும் இரண்டுகோடி ரூபா வரை அபராதமும் விதிக்கப்படும். (க)

# ஈராக்கில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீச்சு ஐவர் உயிரிழப்பு; முப்பத்தியிரண்டு பேர் காயம்!

பலூஜா,ஓக.30.

ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் ஐவர் இறந்தனர்; 32 பேர் காயமடைந்தனர்.

பலூஜாவில் உள்ள விமான எதிர்ப்பு கருவியை அழிக்கும் நோக்கத்தில்தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டது என இராணுவம் தெரிவித்தது. எங்களது விமானத்தைத் தாக்க தீவிரவாதிகள் முயன்றனர். அதற்குப் பதிலடியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது என இராணுவச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க விமானங்கள் அல்-அஸ்கர் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசியதாகவும், இதில் 15 வீடுகள் மற்றும் கார்கள் சேதமடைந்ததாகவும் சம்பவத்தைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் இருவர் இறந்ததாகவும் 9 பேர் காயமடைந்ததாகவும் பொதுமருத்துவமனை மருத்துவர் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

மேலும், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியிலும் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசின. இதில் இருவர் காயமடைந்தனர்.

கடந்த ஏப்ரலில் அமெரிக்க கடற்படை முற்றுகையை விலக்கிவிட்டு, பாதுகாப்புப் பொறுப்பை ஈராக்கியப் படைகளிடம் கொடுத்தபிறகு தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பான இடமாக பலூஜா விளங்குவதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் நம்புகின்றன. இந்நிலையிலேயே இத்தாககுதல் இடம்பெற்றுள்ளது. (க)

# தியாகி திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு

தியாகதீபம் லெப்.கேணல் திலபன் நினைவு எழுச்சிநாள் நிகழ்வின் ஒரு பகுதியாக யாழ். மாவட்ட ரீதியில் திலீபன் ஞாபகார்த்த சுற்றுக்கேடயங்களுக்கான விளையாட்டுக்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை போட்டி ஏற்பாட்டுக்குழு மேற்கொண்டு வருகிறது.

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், ஆண், பெண்களுக்கான தாச்சி, ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மற்றும் இருபாலருக்குமான மரதன் ஓட்டம் என்பன நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகள் தெரிவுசெய்யப்பட்ட முன்னணிக்கழகங்களுக்கிடையேயும் ஏனைய போட்டிகள் திறந்த போட்டிகளாகவும் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் தனிநபர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு தியாகி லெப்கேணல் திலீபன் நினைவுநாள் விளையாட்டு ஏற்பாட்டுக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது. (4-5)

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.உதைபந்தாட்ட லீக், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணிக்கு நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க.எதிர் இளவாலை இளஞ்சுடர் வி.க.

★ மாலை 4.30 மணிக்கு யாழ்.சென்.றொக்ஸ் வி.க.எதிர் அல்வாய் மனோகரா வி.க. (4-5)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகரட்ணம் நடராஜா



யாழ்ப்பாணம், கலட்டியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகரட்ணம் நடராஜா அவர்கள் நேற்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா-அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம் - வள்ளியம்மை அவர்களின் அன்பு மருமகளும் கந்தசாமி (புதுமை லோலன்), மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), தங்கேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் கலாநிதி குணராசா (யாழ். மாநகர ஆணையாளர்) ஆகியோரின் பாசமிகு தமக்கையாரும் சிறிதரன் (அதிபர், யாழ். செட்டித்தெரு மெதடிஸ்ற் தமிழ்க்கலவன் பாடசாலை), ஸ்ரீ சந்திரமோகன் (கனடா), லலிதாதேவி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), லீலாதேவி (கனடா), சுகந்தாதேவி (பிரான்ஸ்), யசோதாதேவி (கனடா), ஸ்ரீரஞ்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயதேவி, அன்பரசி (கனடா), மகாலிங்கம் (சென்.லூட்ஸ் மெடிக்கல் சென்ரர்), சிவப்பிரகாசம் (கனடா), குணபாலசிங்கம் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (கனடா), கலைவாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் (Product Manager E.D.M. System), ஸ்ரீ வாணி, பிரதீபன் (20 ஆம் அணி யாழ்.மருத்துவபீடம்), அனித்தா, ராதிகா (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), சசிதரன், சதீஸ் (Hi-Fi Electronic) கார்த்திகா - செல்வமகேசன், கவிதா - சிவக்குமார் (கனடா), விஜிதா - பிரதீபன் (கனடா), பிருந்தா - இந்திரன் (கனடா), சார்மிளி - சிவலிங்கநாதன் (பிரான்ஸ்), தசானி - ஜெயச்செல்வன் (பிரான்ஸ்), பிரதீமா - நந்தகுமார் (பிரான்ஸ்), சுகந் (கனடா), பிரசாந் (கனடா), லாவண்யா (கனடா), அபிமன் (கனடா), லக்ஸ்மன் (கனடா), சுமன் (கனடா), சைனன (கனடா), கஜானா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சர்மிகா (கனடா), பிருந்திகா (கனடா), நிதேஷ் (பிரான்ஸ்), ஸ்ரீராமன் ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் கனகமணி, இரத்தினம் (கனடா), சிவனேஸ்வரி (கனடா), கமலாம்பிகை (அதிபர், நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை), காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, நாகரத்தினம், பொன்னம்மா, இராமநாதன் மற்றும் கண்மணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வி.ந.சிறிதரன் (மகன்),
க.வி.மகாலீங்கம் (மருமகன்),
கலாநிதி க.குணராசா(தம்பி).

75, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(35911)(34-11-16-40)

# 16வயதுப்பிரிவு கிரிக்கெட் போட்டி: யாழ்.அணிவீரர்கள் தம்புள்ள புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.30

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 16 வயதுக்குட்பட்டோருக்கான மாகாணமட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளைமறுதினம் புதன்கிழமை முதல் தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட அணி வீரர்கள் நாளை செவ்வாய்க்கிழமை தம்புள்ள செல்லவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

வி.ஜே.லூட்சன் (அணித்தலைவர், சென். பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.வினோத் (உபதலைவர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஜே.ஆர்.ஏ.பிரசாத் (யாழ்.மத்திய கல்லூரி), ஆர்.றஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), கே.நிஷாகரன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), எஸ்.ஜனகன்ராஜ் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), ரி.மயூரப்பிரியன் (யாழ்.இந்துக்கல்லூரி), டபிள்யூ.ஜ.ஜக்சன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.அற்ஜரின்ராஜ் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி).

கே.ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), வீ.விதுபாலா (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கே.பென்யோய் (யூனியன் கல்லூரி), கே.யதீஸ்வரன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), பி.வையூகன் (யாழ். இந்துக கல்லூரி), பி.நேசவர்மன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இவ்வீரர்களை இன்று மாலை 4 மணிக்கு யாழ்.இந்துக் க்ல்லூரி மைதானத்திற்கு சமுகம் கொடுக்குமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை இச்சுற்றுப் போட்டியில் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி திருமலை மாவட்ட அணியை எதிர்த்து விளையாடும்.

எதிர்வரும் 2ஆம் திகதி வவுனியா மாவட்ட அணியையும் 3ஆம்திகதி மட்டக்களப்பு அணியையும், 6ஆம் திகதி மன்னார் மாவட்ட அணியையும் எதிர்த்து யாழ்.மாவட்ட அணி விளையாடவுள்ளது (4-5)

## லண்டனில் இன்று விளையாட்டு விழா

லண்டன்,ஒக30

லண்டனில் வருடாந்தம் நடைபெறும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் விளையாட்டு விழா, இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் லண்டன் சவுத்தோல் பகுதியில் உள்ள வறன்பாம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுகின்றது.

இவ்விளையாட்டு விழாவில் 51 தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க அணிகள் கலந்துகொள்கின்ன. அங்கு கிரிக்கெட், வலைபந்தாட்டம், கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கபடி, கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் கமலா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் கமலா நேற்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராஜா மற்றும் மகேஸ், ராயு, சாந்தி, றஞ்சி, தாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி, ஜோன் றோசலீன், றட்சன் (கிளின்ரன் அந்திய காலசேவை), சூட்டி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (30.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82, பழைய பூங்கா வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(35913)(42-40-11-16)

தகவல்:
நாகராஜா நொறிஸ் (மதன்)
பேரப்பிள்ளை.

### பொன்னையா ஐயாத்துரை

தாவடி வடக்கைச் சேர்ந்த பொன்னையா ஐயாத்துரை அவர்கள் நேற்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னையா - நாகம்மா தம்பதிகளின் புதல்வனும் இராசையா, காலஞ்சென்றவர்களான தையல், தங்கமுத்து ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: .
பொ.இராசையா
(சகோதரன்).

*மாரியபுலம்,*
*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு, கொக்குவில்.* (35912)(42-40-11-16)

## குடத்தனை மணல் விநியோகம் நிறுத்திவைத்தல்

இன்று (30.08.2004) திங்கட்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. இத்திகதியைப் பெற்றுக்கொண்டவர்கள் நாளை (31.08.2004) செவ்வாய்க்கிழமை மணலைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

நிர்வாகம்
மணல் விநியோகப்பகுதி
வடமராட்சி கிழக்கு,
புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்.
(C/37334)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவில்பற்று, சாமிச்சாட்டிக்குடியிருப்பும் ஐயங்கன் வளவும் ஆதனப் பெயர் கொண்டதும் நிலப்பரப்பு 5 குளி 00.01 ஆம் கொண்ட ஆதனம் உடன் விற்பனைக்கு உண்டு. சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு நேர் முன்னால் அமைந்துள்ளது.
தொடர்பு: தொலைபேசி எண்.
077-3053011
(35921)

**லக்சுமி** இனுவில்

இன்று முதல்
விக்ரம், சூர்யா, சிம்ரன், லைலா நடித்த
பிதாமகன் (ரீல்)
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பு.நே)
(35599)(12)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், மீனா நடித்த
அன்பு சகோதரன் (ரீல்) தினசரி 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி,சனி,ஞாயிறு.
STRIKE FORCE (இரவு 8.45பு.நே)
(C/36305) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர

பு.நே.: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ்** சுன்னாகம்
பிரசாந், மீனா, சரத்பாபு நடித்த
திகில்காட்சிகள் நிறைந்த
ஷாக் (ரீல்)

காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)
(C/36415) (12)


## கால்நடைகளை வெட்டத் தடை

நீர்வேலி, ஓக.30
வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சகல கொல்களங்களிலும் மறுஅறிவித்தல்வரை இறைச்சிக்காகக் கால்நடைகளை வெட்ட வேண்டாம் என வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போது கால்நடைகளுக்குக் கால்வாய்நோய் பரவி வருவதன் காரணமாக கால்நடை வைத்திய அதிகாரியின் அறிவித்தலுக்கமைவாகவே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-110-201)

## ஆயுதங்கள் மீட்பு

மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத தனங்கிளப்புப்பகுதி வீடொன்றின் மலக்கூடக் குழிக்குள் ஆயுதங்கள் காணப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இப்பகுதியில் வெடிப்பொருள்கள் அகற்றும் படையினர் மலகூடக் குழிக்குள் ஆயுதங்கள் இருப்பதைக் கண்டுபிடித்து மீட்டதாகவும் தெரிய வருகின்றது. (எ-117)

## திருத்தம்

நேற்றைய உதயனில் (29.08.2004)-18ஆம் பக்கத்தில் வெளியாகிய- கொக்குவில் 'மொடேர்ன் நெற்'-நிறுவனத்தின் 'உடன் தேவை' என்னும் தலைப்பிலான விளம்பரத்தில் - 'எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு ஆண்கள் தேவை' என்று இருப்பதை - 'எமது நிறுவனத்தில் பணிபுரிய ஆண்கள் தேவை' என்று திருத்தி வாசிக்கவும். பெண்களும் விண்ணப்பங்களை அனுப்பலாம். என்று விளம்பரதாரர் அறியத்தந்துள்ளார்.

உ



புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி (கலட்டிப்பிள்ளையார் கோயில்)
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷண

## மஹாகும்பாபிஷேகப் பெருவிழா

03.09.2004 வெள்ளிக்கிழமை காலை 6.45 மணி முதல் 7.25 வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.
30.08.2004 திங்கட்கிழமை கிரியாரம்பம்.
02.09.2004 வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நடைபெறும்.
செப்.முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.
03.09.2004 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் முருகப்பெருமானுக்குத் திருக்கல்யாணம் நடைபெற்றுத், திருவீதியுலாவரும் காட்சி இடம்பெறும்.

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

பிரதிஷ்டா பிரதம குரு: சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணியக்குருக்கள்.
- திருக்கேதீஸ்வர தேவஸ்தான பிரதமகுரு -
ஆலய பிரதம குரு: சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள்
- ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு-
சர்வசாதகம்: ஆகமப்பிரவீணா, பிரதிஷ்டாதிலகம்
- சிவஸ்ரீ ஐ.கைலாசநாத வாமதேவக்குருக்கள்.
(நயினை ஆதீன பரம்பரைக்குரு)

கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம்,
புங்குடுதீவு - 10
- ஆலய நிர்வாகம் -
(35917)(43-13-18)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் துரைச்சாமி ஜெகப்பிரகாஸ்

- ஆட்டோ பத்தர் -

தாயின் மடியில் 08-12-1946
இறைவன் அடியில் 31-07-2004

முப்பத்தொரு நாளானாலும் உமது முகம்
மறக்கமுடியுமா?
எப்போதும் உமது திருமுகம் கண்முன்னே
தெரிகிறது!
ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

இன்று (30-08-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப்பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.
(35918)(32-13-18)
- ல.ஜெகன்
(மருமகன்).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
*திருமதி ல.மகாலிங்கம்* அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி யோகரத்தினம் நடராசா**
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடியில் நிலைத்திருக்க வேண்டுகின்றோம். அத்துடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்.இந்து*
*ஆரம்ப பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.* (C/37335)(43-18-13)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை
*செல்வி வ.சோதிரட்ணம்* அவர்களின்
**அன்புத் தாயார்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

- மானிப்பாய் இந்துக் கல்லூரிச் சமூகம் -
(C/37337)(43-13-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசதுரை மகேஸ்வரி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராசதுரை மகேஸ்வரி அவர்கள் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் (பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும், கருணாகரன், ஜெகதீஸ்வரன், ரஞ்சிதம் (கனடா), சிறிதரன், இராகினி ஆகியோரின் தாயாரும் தேவநேசம், தவநிதி, ஞானேஸ்வரன் (கனடா), யோகராணி, விஜயகுமார் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சண்முகம், புனிதவதி, புஸ்பதேவி ஆகியோரின் சகோதரியும் மர்லின், யஸ்மின், அஜித், டிறேஸ், சபேஸ், திறோசா, தனுசி, சுபகாந், ஜியானி, விதுஷா, விபுலன், றஜீவன், விதுனா, சோபனா, மயூரி ஆகியோரின் பேர்த்தியும் வாசுகி (பிரான்ஸ்), வனிதா (கனடா), வத்சலா (கனடா), விஜித்தா (பிரான்ஸ்), வனஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயாரும் சுவேந்திரராஜா, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை கேணியடி லேன், கொக்குவிலில் நடைபெற்று, தகனக்கிரியை கோம்பையன் மணல் மயானத்தில் பிற்பகல் 4 மணி அளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*கேணியடி லேன்,*
*கொக்குவில்.*
(35919)(32-13-18)
தகவல்:
மு.சுவேந்திரராஜா
(மைத்துனர்).

### கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை (பலாலி)

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை-இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் பூமணி (பவா), சாந்தினிதேவி (செல்லம்), சந்திராதேவி (லண்டன்), சந்திரசேகரன் (சேகர்-சுவிஸ்), கேதீஸ்வரன் (கிளியன்), சரோஜாதேவி (தேவி-ஜேர்மனி), சதீஸ்வரன் (சிவா-லண்டன்), சுதாகரன் (அரசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் (மணியம்), றஞ்சன் (லண்டன்), நிர்மலன் (லண்டன்), பிறேமாவதி (சுதா-சுவிஸ்), பவானி (வாணி), பாலகிருஸ்ணன் (பாலா-ஜேர்மனி), சோபனா (சோபா-லண்டன்), சத்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும் இதயகுமார், சுபாஷ்குமார், லுமேஸ்குமார், துஷாந்தகுமார், றொசாந்தகுமார், நிசாந்தகுமார், கீர்த்தனா, நிரோஜன் (லண்டன்), நிருஜா (லண்டன்), நிரோஜினி, நிர்சனா, பிரித்தி (சுவிஸ்), பவிதா (ஜேர்மனி), சகிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னையா, வள்ளிப்பிள்ளை, சின்னத்தங்கம், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, சின்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதவராயர் கோயிலடி,*
*மீசாலை.*
(35890)(43-13-18)
தகவல்:
சுதாகரன் (மகன் - அரசன்).

### மயிலு கணேசு



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட மயிலு கணேசு அவர்கள் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் செல்வரட்ணம், காலஞ்சென்ற சுதா (லங்கா சிமெந்து, முன்னாள் உத்தியோகத்தர்) மற்றும் வசந்தி, யசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவறஞ்சினியின் மாமனாரும் கசிபன், மகிபன், கம்சாயினி, யதுமிதா ஆகியோரின் பேரனும் இரத்தினம், இராசமலர், காலஞ்சென்றவர்களான பூமணி, பராசத்தி, சிவனேசன் மற்றும் நாகபூசணி, மகாதேவன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-08-2004) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.*
(35924)(32-13-18)
தகவல்:
யசி (மகன்).

# தமிழர்களின் அரசியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட ஜெயசிகுறு படைநடவடிக்கை உண்மையில் உலக நாடுகளின் யுத்தம். விடுதலைப் போராட்ட அமைப்புக்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்ற நம்பிக்கையில் பல நாடுகள் இலங்கைக்கு தம்மாலியன்ற உதவிகளைச் செய்தன. அதுமட்டுமல்லாமல் யுத்த களத்திற்கே நேரடியாகச் சென்று ஆலோசனைகளை வழங்கின. அவற்றின் எதிர்பார்ப்பையும் மீறி எவ்வாறு அந்தக் களம் அவர்களிற்கு எதிராக மாற்றியமைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஜெயசிகுறு இராணு நடவடிக்கை உலக நாடுகளின் யுத்தம் என்பது விரைவில் வெளிச்சத்திற்கு வரும். ஆயிரக்கணக்கான உயிர்களை விலையாகக் கொடுத்து வளர்க்கப்பட்டது எமது விடுதலைப் போராட்டம். அதில் எந்த வெளித் தலையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இந்தச் சமாதானக் காலத்தின் வெற்றியாகத் தமிழரின் விடுதலை தொடர்பாக உலக நாடுகளில் தெளிவான ஒரு கோடு வரையப்பட்டுவிட்டது. இந்தக் கோட்டின் ஒரு பக்கத்திற்குள் மக்கள் தங்களை அடையாளப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

எந்தக் கணத்திலும் தமிழர்களுக்கு வெற்றி வரும் என்பதையே இன்று சந்திரிகாவினதும், ஜே.வி.பி. மற்றும் இதர கட்சிகளின் நிலைப்பாடுகளும் எடுத்தியம்புகின்றன. சர்வதேசத்தின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப எமக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முனைப்பில் வெற்றி கண்டு சர்வதேச உறவுகளின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தியுள்ளோம். இலங்கைத் தீவின் இருதரப்பினருக்கும் இடையில் ஒரு சம நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கையானது 1920இல் அருணாசலத்தால் முன்னெடுக்கப்பட்டு 1975ஆம் ஆண்டு தந்தை செல்வாவினால் தமிழீழமே இறுதி முடிவு என்று அறிவிக்கப்பட்டது. நாம் இப்போது வடிவத்தை மாற்றி அத்தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்கின்றோமே தவிர இந்தப் போராட்டம் நாம் ஆரம்பித்து வைத்தது அல்ல.

இன்றைய சமாதான காலத்திலும் எங்களை நோக்கிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால், சமாதான முன்னெடுப்புக்களினூடே பயணித்த எம்மிடையே கருணா என்ற ஒரு குழப்பக்காரனை கண்டுபிடித்து போரைத்திணித்தது. கொலைகளை ஆரம்பித்தது யார்? நாம் போர் விரும்பிகள் அல்லர். தமிழர்கள் மீதான நிழல் யுத்தத்தை இலங்கை அரசே வலிந்து திணித்தது. பின்னர் எம்மைக் கொலையாளிகள் என்பதை ஏற்கமுடியாது.

இன்றைய திகதியில் தமிழர்கள் வெல்லப்படமுடியாத நிலையில் இருக்கின்றோம். இழப்பில்லாமல் செல்லமுடியுமா என்பதையே நாமும் இன்று எதிர்பார்க்கினறோம். எதேச்சையாகச் சண்டை தொடங்கினால் கூட அந்தப் போரை வழி நடத்த நாங்கள் கடமைப்பட்டவர்களே. ஏனெனில் நாங்கள் போராடுவது எமது இழந்த வாழ்வை மீட்பதற்குத்தானே தவிர வேறு எதற்காகவும் அல்ல.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-க)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பின்னணியில், சமாதான நடவடிக்கைகளை முன் நகர்த்தும் முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்னர் இரு தரப்பினரிடையேயும் யுத்த நிறுத்தத்தைப் பேணுவதற்கு வழிசெய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முறியாமல் தாக்குப் பிடிப்பதை உறுதிப்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் கருதுகின்றனர் எனத் தெரிகின்றது.

இதற்கான, விரைவான செயற்பாட்டை அவர்கள் ஆரம்பித்திருக்கின்றனர்.

முதல் கட்டமாக அனுசரணைக் குழுவின் பிரதான பங்காளியான எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சகிதம் நாளை லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கின்றார்.

கொழும்பிலும் பிற இடங்களிலும் இடம்பெற்ற வன்முறைகளில் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். புலிகளே இக்கொலைகளுக்குக் காரணம் என அரசுத் தரப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், அதனைப் புலிகள் அடியோடு மறுத்து வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்களைத் தவிர்க்குமாறு நாளைய சந்திப்பின்போது நோர்வேப் பிரதிநிதிகள் புலிகள் தரப்புக்குத் தெரிவிப்பர் எனக் கூறப்படுகின்றது.

நாளைய சந்திப்பின் பின்னர் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், கொழும்பு திரும்புவார். அவர் இவ்வார இறுதியில் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருஹௌவ்டேயையும் அழைத்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பர் எனக் கூறப்படுகின்றது.

கிழக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஏற்பாட்டில் - துணைப் படைகளில் பெயரில் - விடுதலைப் புலிகளுக்கு எதிராக - மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் வன்முறைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இந்தச் சந்திப்பின்போது அவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவர் என தெரியவருகின்றது.

## தமிழ்ச்செல்வனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கின் இன்றைய நிலைமை, கிழக்கின் தொடர்ச்சியான கொலைகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது

இன்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் கலந்துகொள்வர். (ஐ-3)

## 'விடுதலைப் புலிகள்' இன்று வெளியாகும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான விடுதலைப்புலிகள் ஓகஸ்ட் மாதத்துக்குரிய 118 ஆவது குரல் சமாதானத்திற்கு எதிரான பேரினவாதக் கூச்சல்கள் என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

அமைதி முயற்சியும் சர்வதேசத்தின் தார்மீகக் கடமையும் எனச் சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன்வரும் இவ்வேட்டில் க.வே.பாலகுமாரன் எழுதிய "வரலாற்றின் விளைபொருள் என்ற கட்டுரையும் சாரணன் எழுதிய ஜே.வி.பிக்கு யுத்தம் வேண்டும். என்ற கட்டுரையும் எல்லாளன் எழுதிய தீர்வுத் திணிப்பை தமிழினம் ஏற்காது மற்றும் பிரபுத்திரன் எழுதிய 'யுத்தத்திற்கு ஆயுத்தமாயிரு சமாதானம் வரும்" போன்ற அரசியல் கட்டுரைகளும் தமிழழகன் எழுதிய எதிரிக்கு சிம்மசொப்பனம் என்ற கட் டுரையும் இடம்பெறுகின்றன. (ஐ)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், நான் எமது அமைப்பின் சார்பில் கிழக்கு நிலைமை குறித்து அவரிடம் விளக்கவிருக்கிறேன்.

கருணா என்ற நபரினால் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக எழுந்த சிக்கல்களை எமது இயக்கம் முற்றாக அடக்கிவிட்டது. கருணாவும் தலைமறைவாகிவிட்டார். இனி அவர் விவகாரம் ஒரு பெரிய பிரச்சினையே அல்ல.

ஆனால், கருணா குழு என்ற பெயரில் இராணுவப் புலனாய்வுத்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் - ஏற்பாட்டில் - நடக்கும் வன்முறைகள் தான் இப்போது பிரச்சினைக்குரியதாக உள்ளன.

ஈ.பி.டி.பி., புளொட் மற்றும் ஏனைய துணை இராணுவப் படைகளையும் சேர்த்துக் கொண்டு - கருணா அணி என்ற பெயரில் ஒளிந்திருந்து கொண்டு - இராணுவப் புலனாய்வுப்பிரிவு நடத்தி வரும் கைங்கரியம் முதலில் நிறுத்தப்படவேண்டும் என்ற செய்தியை நோர்வேக்கு எடுத்துரைப்போம். இந்நிலைப்பாட்டை இலங்கை அரசுக்குத் தெளிவாக எடுத்துக்கூறும் படியும் கோரவிருக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் எந்த இராணுவத் துணைப் படையும் செயற்படக் கூடாது: அனைத்தும் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். அதை - அந்தக் கடப்பாட்டை - அரசுத்தரப்பு முழுமையாகக் கடைப்பிடிக்குமானால் சகலதும் நேர்சீராகும். நிலைமை சீரடையும், பதற்ற - முறுகல் - நிலை தணியும். அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - முன்னெடுக்கக்கூடிய வாய்ப்பான சூழ்நிலை ஏற்படும்.

இன்றைய நிலையில் சமாதான முயற்சிகள் குறித்துப் பேசக்கூடிய சூழநிலையே இல்லை.

இராணுவத்தினரின் புலனாய்வுப் பிரிவினரின் சதி, நாசவேலைகளை இலங்கை அரசு நிறுத்துமானால் மட்டுமே சமாதான முயற்சிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பான சூழ்நிலை ஏற்படும்.

என்றாலும், உடனடியாக யுத்தம் வெடித்து விடும் ஆபத்து இருப்பதாக நான் கருதவில்லை.

அமைதி வழியில் - சமாதான முறையில் - இணக்கமான தீவு ஒன்றை எட்டுவதற்கு இயன்ற வரை விடாது முயற்சிப்பது என்பதில் எமது இயக்கம் தீவிரமாக உள்ளது - இவ்வாறு மதியுரைஞர் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (ஐ-க)

## புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையுடன் மட்டக்களப்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். கணவர் தன்னையும் பிள்ளையையும் எப்படிக் கொடுமைப்படுத்தினார் என்பது குறித்து அவர் தனது உறவினர்களிடம் தெரிவித்துள்ளார் என்று பொலஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவரது கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.(க-3)

## பக்தர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்களில் ஐந்து பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். இவர்கள் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர். காயமடைந்த ஏனையோர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர்.

காயமடைந்த சகலரும் வரணி, இயற்றாலை, தாவளைப் பகுதியைச் சேர்ந்த உறவினர்கள் ஆவார்.

காயமடைந்தவர்களில் இராமநாதன் அன்னலட்சுமி (வயது 57), ஞானராசா செல்வமலர் (வயது 42), பாலகிருஷ்ணன் ரூபன்(வயது 24), ஞானகுலசேகரம் சத்தியசீலன் (வயது15), ஞானராசா பிரணவன் (வயது 03) ஆகிய ஐவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய அனைவரும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

செல்வராசா தங்கலட்சுமி (வயது 47), கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணரூபன் (வயது 24), ஞானகுலசேகரம் ரட்ணசிங்கம் (வயது16), சந்திரலிங்கம் சந்திரரூபிந்தன் ( வயது2½), தர்மராஜா பகீரதன் (வயது 10), மித்திரன் கஸ்தூரி (வயது 03), ஞானராசா பிரசாந் (வயது 07), குகன் வசீகரன் (வயது 11), வல்லிபுரம் சிவகாமி (வயது 51), பொன்னமபலம் நாகம்மா (வயது 66), குஞ்சுத்தம்பி சுதர்மன் (வயது 20), ஞானகுலசேகரம் சொர்ணா (வயது 5), பொன்னம்பலம் கணேசலிங்கம் - லொறிச் சாரதி (வயது 24), புவனேஸ்வரன் இந்திராதேவி (வயது 33), தர்மராசா பார்த்தீபன் (வயது 13), இராமநாதன் மயூரி (வயது 18), ஞானகுலசேகரம் ஐங்கரன் (வயது 8), சிதம்பரப்பிள்ளை ஜெனிற்றா (வயது 05), சிதம்பரப்பிள்ளை கோகுலன் (வயது 8). (ஐ-3-13-173)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லதம்பி இராசம்மா

2ஆம் வட்டாரம், வேலணையைச் சேர்ந்த திருமதி நல்லதம்பி இராசம்மா அவர்கள் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

*2 ஆம் வட்டாரம்,*
*வேலணை.* (35925)(17-18-32)

தகவல்:
துரைராசா.

## சடையர் இலட்சுமணன்

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் இலட்சுமணன் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சடையர்-குழந்தை ஆகியோரின் அன்பு மகனும் சிவலை-பொன்னி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், இலட்சுமி, பார்வதி, இராமன் மற்றும் வைரமுத்து ஆகியோரின் சகோதரரும் பசுபதியின் அன்புக் கணவரும் தம்பிராசா செலவராசா,செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி, நவரத்தினம், சரோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2004) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (35923)(17-18-32)

தகவல்:
செல்வராசா (மகன்).

## பொன்னுத்துரை நாராயணலிங்கம்

**(Rtd. P.W.D. Overseer, Nuwara Eliya)**



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்கானை தேவாலய வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாராயணலிங்கம் அவர்கள் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (31-08-2004) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.


இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுககொள்ளவும்.
(மேலதிக விவரம் நாளைய உதயனில்)

*R ¼, அன்டர்சன் தொடர்மாடி,*
*கொழும்பு-5.*
**T.P - 011 2592115** (35926)(17-18-32)

தகவல்:
நா.சந்திரமோகன்
(மகன்).

## சின்னையா இரத்தினம்

(தாடி இரத்தினம்)



சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னையா இரத்தினம் அவர்கள் நேற்று (29-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா -சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-08-2004) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாகியப்பிட்டி கொட்டுப்பனை மயானத்திறகு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.* (35928)(17-18-32)

தகவல்:
குடும்பத்தினர்.


உங்களுக்கு இதயம் ஒன்று இருந்தால்............



அதில் எங்களைக் கவனம் செலுத்தவிடுங்கள்

அறுவைச் சிகிச்சை இல்லை!!! ஒரு சில ஆயுர்வேத குளிசைகள்,அந்தக் குளிசைகள் உங்கள் அடைப்புக்களை கரைத்துவிடும். செலவு குறைவு. மிகவும் குறைவு. பக்க விளைவுகள் இல்லை. வேறுவித சிக்கல்களுமில்லை. கடந்த ஆறு வருடங்களில் ஒரு தோல்வியும் கூட ஏற்பட்டதில்லை.
(இது குறித்து அறிய நூறு முகவரிகளை எம்மால் வழங்க முடியும்)
மேல் விவரங்களைப் பெற தயவுசெய்து எங்களுக்கு எழுதுங்கள். இதற்காக 5 நிமிடங்களைச் செலவழியுங்கள். இந்த 5 நிமிடங்களும் உங்கள் வாழ்வில் மிகுந்த நினைவுக்குரிய காலமாக அமையும். அது ஆரோக்கியமான, கவலையற்ற, இதயக்கோளாறு மற்றும் மார்புவலி இல்லாத சாதாரண வாழ்வை மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் வழங்கும்.

| | |
|---|---|
| மூட்டு வீக்கம்/மூட்டுவலி......?? | ஒற்றைத் தலைவலி...?? நிரந்தர நிவாரணம் |
| நீண்டகால முதுகுவலி...?? நீண்டநாள் முதுகுவலி குறைக்கப்படும்! | சிறுநீரக சுரப்பி பிரச்சினைகள்...?? அறுவைச் சிகிச்சையிலிருந்து சிறுநீரக சுரப்பியை பாதுகாத்துக்கொள்ளுங்கள் |
| கல்லீரல் பிரச்சினைகள்...?? கல்லீரலில் ஏற்படும் மஞ்சள் காமாலை மற்றும் உபாதைகளுக்கு | இருதயத்தில் ஓட்டை? இருதயத்தில் ஓட்டையுள்ள குழந்தைகள் அறுவை சிகிச்சையைத் தவிர்க்கலாம் |

விவரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும்

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
A BOI APPROVED COMPANY

Level 5/East Tower/1C, World Trade Centre,
Colombo-01.
Phone: 0094-11-5517897, 5551879, 5558442
Fax:0094-11-5517756
E-mail:fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.com

மருத்துவ ஆலோசனைகள்: Dr.வசந்தாபத்மகுமார தொ.பே.077-3063550
வர்த்தக மற்றும் ஏற்றுமதி தகவல்: திரு.நிரோஷ் ஜயமகா தொ.பே.077-3063540

கிடைக்குமிடங்கள்:

Dr.எ.எல்.டி.பீ.லியனகே, ஹோகான் ரசயனா காரய No.3. எச்.கே. எட்மன் மாவத்த. காலி. தொ.பே: 091 -2246533

Dr. பிரசன்னா கல்டேரா, கவ பியச ஆயுர்வேதவைத்தியசாலை 562. கொழும்பு வீதி. கம்பஹா. தொ.பே. 033 4674024

Dr.லலித் அலவத்துகொட, நேச்சர் கியூர் ஆயுர்வேடிக் இல. 831-1. கோட்டே வீதி. எத்துல்கோட்டை. கிளினிக். தொ.பே. 011 2886319

Dr.எஸ்.எம்.வீரசிங்க பண்டார - பெஹெத் சாலாவ களுகமுவ . தொ.போ. 037 2249134

Dr.உதனி பீ.உபயசேகர போவத்த பெஹெத் சாலவ (Pvt) Ltd. இல. 144. கொழும்பு வீதி. கண்டி தொ.பே.081 222 2904

Dr.சிசர எம்.வீஜேசூரிய, இல.17. நிக்காபே மாவத்த நதிமல. தெஹிவல தொ.பே. 5511800 / 5550882

Dr.ரீ.டி.மதுரநாயகம் இல.187. கடற்கரை வீதி. கொழும்பு-11. தொ.போ. 011 2421398

Dr.ஆனந்த சமரநாயக்க, மெடிக்கல் சென்ரர் புதிய புத்தளம் வீதி. பொத்தனேகம. அனுராதபுர. தொ.பே: 025 222 5180

Dr.டி.எம்.எஸ்.கே.திஸாநாயக்கா, கம்பஹா பெஹெத் சாலவ. 231. கொழும்பு வீதி. குருநாகல்.

Dr.ஜீ.குகராஜ், லோட்டஸ், பெஹெத்சாலவ அனுராதபுர சந்தி. கின்னியா. திருகோணமலை. தொ.பே. 077 7602535 (சி-37327)(34-11)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.